# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2008
# அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## Tamil Competition - Australian Society of Graduate Tamils

# விபரக் கொத்து
# Information Booklet


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | 2 |
| போட்டிகளுக்கான பொது விதிமுறைகள் | 3 |
| இணைப்பு 1 – வயதுப் பிரிவுகள், போட்டிகளின் அட்டவணை | 10 |
| இணைப்பு 2 – விண்ணப்பப் படிவம் | 11 |
| இணைப்பு 3 – கவிதை மனனப் போட்டிகளுக்கான விளக்கம் | 13 |
| இணைப்பு 4 – பேச்சுப் போட்டிக்கான விளக்கம் | 15 |
| இணைப்பு 5 – வாய்மொழித் தொடர்பாற்றல் பற்றிய விளக்கம் | 17 |
| இணைப்பு 6 – எழுத்தறிவுப் போட்டிகளுக்கான விளக்கம் | 19 |
| இணைப்பு 7 – விவாதப் போட்டிக்கான விளக்கம் | 20 |
| இணைப்பு 8 – வினாடிவினா போட்டிக்கான விளக்கம் | 21 |
| இணைப்பு 9 – தனி நடிப்புக்கான விளக்கம் | 22 |
| இணைப்பு 10 – பல்திறன் போட்டிக்கான விளக்கம் | 22 |
| இணைப்பு 11 – கவிதை மனனப் போட்டிக்கான கவிதைகள் | 24 |
| இணைப்பு 12 – பேச்சுப் போட்டிக்கான விடயங்கள் | 28 |
| இணைப்பு 13 – போட்டிகளுக்கான பரிசு நன்கொடை வழங்கும் படிவம் | 31 |
| இணைப்பு 14 – போட்டிகள் பற்றிய உங்கள் கருத்தறியும் படிவம் | 32 |


**தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் சம்பந்தமான முக்கிய திகதிகள்:**

24 ஜுன் மாதம் 2008 – விண்ணப்ப முடிவு திகதி
16, 17, 23, 24 ஆகஸ்ட் 2008 – நியூசவுத் வேல்ஸ் மாநிலப் போட்டிகள் நடைபெறும்.
4 ஒக்டோபர் 2008 – சிட்னியில் தேசிய போட்டிகள் நடைபெறும்.
5 ஒக்டோபர் 2008 – சிட்னியில் பரிசளிப்பு விழா
ஏனைய மாநிலப் போட்டிகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

## எம்முடன் தொடர்பு கொள்ள:

**முகவரி: இணைப்பாளர், தலைமையகம், தமிழ் ஊக்குவிப்புக் குழு**
**Coordinator, Tamil Competition, PO Box 4040, NSW 2140, Australia.**
Email: asogt.tc@gmail.com Website: www.kalappai.org

**COORDINATORS:**

| | | |
|---|---|---|
| National Coodinator: | Mr. K. Narenthiranathan: | **(07) 3122-1847** or **0402 026 922** |
| Sydney: | Mr. A. Nimalendran | **(02) 8824 3051** or **0419 255 625** |
| Melbourne: | Mrs. A. Yaso | **(03) 9449-7887** |
| Canberra: | Mr. Adrian Arulanandam: | **(02) 6292-4735** |
| Adelaide: | Dr. Gnanasampanthan: | **(08) 8336-7403** |
| Queensland: | Mrs. Kala Sivasubramaniam | **(07) 3279-5069** |
| Darwin: | Mr. K. Katpagan: | **(08) 8927-1689** |
| Auckland (NZ) | Mr. A. Yogakumar: | **(649) 271-4508** |
| Wellington (NZ) | Mr. M. Ramesh | **(644) 568-4235** |

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2008
# அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

## தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2008

அவுஸ்திரேலியாவின் நியூசவுத்வேல்ஸ், கன்பரா மாநிலங்களில் கடந்த 14 ஆண்டுகளாக நடாத்தப்பட்ட தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 10 வது ஆண்டிலிருந்து **அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கத்தின்** தலைமையின் கீழ் நடாத்தப்பட்டு வருகின்றன. கடந்த வருடம் போல இவ்வருடமும் அவுஸ்திரேலிய, நியூசிலாந்து முழுவதும் இப்போட்டிகள் நடைபெறவிருக்கின்றன. இப்போட்டிகள் கருப்பொருள் ஒன்றினை மையமாக வைத்தே நடாத்தப்படுகின்றன. இந்த வருடப் போட்டிகளுக்கான கருப்பொருள் **“யாவரையும் மதிப்போம் நாமாக இருப்போம்”** என்பதாகும். இப்போட்டிகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

இந்தத் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் சிட்னியிலும் மற்றைய அவுஸ்திரேலிய, நியூசிலாந்து மாநிலங்களிலும் நாடாத்தப்படவிருக்கின்றன. இம்முறை எழுத்தறிவுப் போட்டிகளுடன் பேச்சு, கவிதை மனனப் போட்டிகளும் (குறிப்பிட்ட பிரிவுகளில் மட்டும்) அவுஸ்திரேலிய-நியூசிலாந்து மட்டத்தில் ஒரு தேசியப் போட்டியாக நடாத்தப்பட இருக்கின்றன. இப்போட்டிகள் முதலில் மாநில மட்டத்தில் நடாத்தப்பட்டுப் பின்னர் தேசிய மட்டத்தில் நடைபெறும். மாநிலப் போட்டிகளுக்கும், தேசிய மட்டத்திலான போட்டிகளுக்கும் வேறுவேறாகப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும். தேசிய மட்டத்தில் நடைபெறும் 10 போட்டிகளுக்கும் 10 **தங்கப்பதக்கங்கள்** முதற் பரிசாக வழங்கப்படும்.

சில முக்கியமான மாற்றங்களை இங்கு தருகின்றோம்:

1) **பாடல் மனனப் போட்டி இவ்வருடத்திலிருந்து கவிதை மனனப் போட்டியாகப் பெயர்மாற்றம் பெறுகின்றது. இதன் முக்கிய நோக்கம் கவிநடையில் கவிதையை ஒப்புவிக்க வேண்டும் என்பதே. குவிதையை இராகத்துடன் பாடக்கூடாது.**
2) **மத்திய பிரிவிற்கான பாடல் மனனப் போட்டி விலக்கப்பட்டுள்ளது.**
3) **வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் வாசித்தலும் ஒரு அம்சமாகச் சேர்க்கப்பட்டுள்ளது.**
4) **பல்திறன் போட்டி ஒரு விசேட போட்டியாக 18-30 வயதுக்குட்பட்டவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.**
5) **அத்துடன் விசேட எழுத்தறிவுப் போட்டி இவ்வருடத்திலிருந்து இளைஞர் பிரிவிற்கான விசேட போட்டியாக நடாத்தப்படவுள்ளது.**

ஆண்டுதோறும் உங்களிடமிருந்து எமக்குக் கிடைக்கின்ற கருத்துக்களைக் கொண்டு, இப்படியான பல மாற்றங்கள் செய்யப்படுவதனால், எமது போட்டிகளுக்கான விதிமுறைகளைக் கவனமாக வாசித்து அறியவும். அதன் பின்னரே நீங்கள் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்யவேண்டும். எமது போட்டிகளுக்கான விதிமுறைகளும் மற்றைய விபரங்களும் இந்த விபரக் கொத்தில் அடங்கியுள்ளன. இவற்றைத் தமிழ்ப் பாடசாலைகளிலோ, அல்லது எமது இணையத் தளத்திலோ பெற்றுக் கொள்ளலாம். இம்முறை போட்டிக்கான விண்ணப்பப் படிவம் 2 பக்கங்களைக் கொண்டுள்ளது. அத்துடன் உங்கள் விண்ணப்பப் படிவம் உங்கள் பாடசாலையின் பிரதிநிதியால் சரிபார்க்கப்பட்டு விபரங்கள் உறுதி செய்யப்படவேண்டும்.

எமது சங்கத்தின் திட்டங்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்ட புதியதொரு இணையத் தளத்தை (www.kalappai.org) உருவாக்கியுள்ளோம். இதில் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் பற்றிய அனைத்து விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது போட்டிகளில் மாநில, தேசிய மட்டங்களில் பங்குபற்றி உங்கள் திறமைகளைக் காண்பித்துப் பரிசுகளை வென்றெடுக்க எமது நல் வாழ்த்துக்கள்!!

**திரு. அ. நிமலேந்திரன்**
**இணைப்பாளர், தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 2008**

# யாவரையும் மதிப்போம் நாமாக இருப்போம்

**(இந்த வருடப் போட்டிகளுக்கான கருப்பொருள்)**

நாம் ஒரு பல்கலாசார சமுதாயத்தில் வாழ்ந்து வருகின்றோம். புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் நாம் பல சவால்களை எதிர் கொள்கின்றோம். நாம் எமது சமுதாயத்தினரையும் மற்றைய சமுதாயத்தினரையும் புரிந்து இசைந்து வாழ்ந்து வருகின்றோம். மனிதனுக்கு மனிதன் மதிப்பளித்து ஒரு பல்லின சமூகமாக வாழத் தலைப்பட்டுள்ளோம்.

எமது தனித்துவ அடையாளம் தமிழர் என்பதாகும். எங்களின் தாய்மொழி, கலாசாரம், பண்பாடு (Heritage) என்பன எமது இனத்தின் வளமாகும். இவை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வழி வழியாக வரும் சொத்துக்கள். நம் தமிழ் இனத்தின் வரலாறு, தமிழர்கள் ஆண்ட கதை, வீழ்ந்த கதை, புலம் பெயர்ந்த கதை எல்லாம் எம் வாழ்வின் அத்தியாயங்கள். எமக்கென இருக்கும் இந்த அரிய நெடிய வரலாறுகளையும் அடையாளங்களையும் கொண்ட நாம் தமிழராக இருக்கவேண்டியதும் மிக முக்கியமானது. எனவே நாம் நாமாக இருந்து கொண்டு மற்றவர்களையும் மதித்து, நாம் புலம்பெயர்ந்து வாழும் இந்தப் பல்கலாசார நாடுகளில் இனிதே வாழ்வோம். இத்தகைய பரந்த பொருளையே எமது கருப் பொருளாகக் கொள்கின்றோம்.

### பிரதான குறிக்கோள்

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி நடத்தப்படுவதன் பிரதான குறிக்கோள்: அவுஸ்ரேலியாவிலும் நியூசிலாந்திலும் தமிழ்மொழியையும், தமிழ்க் கலாசாரத்தையும் பல தலைமுறைகளுக்குப் பேணி வளர்ப்பதாகும்.

### நோக்கம்

தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளில் (குறிப்பாக அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில்) வாழ்கின்ற தமிழ்ச் சிறார்கள் தமிழ் கற்பதை தொடர்ந்து ஊக்குவிப்பதும், அவர்களிடையே தமிழ்மொழி, தமிழ்க் கலாசாரம் ஆகியனவற்றில் ஆர்வத்தினையும், பற்றினையும், ஈடுபாட்டினையும் ஏற்படுத்துவதுடன், இங்குள்ள தமிழ் இளைஞர்களிடையே நல்லதொரு தலைமைத்துவத்தை உருவாக்குவதும் எமது நோக்கங்களாகும்.

## தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 2008
## பங்குபற்றுவதற்கான தகுதிகளும் பொது விதிமுறைகளும்

**1.0 போட்டிகளுக்கான பொது விபரங்கள்:**

1.1 இந்தத் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்தில் வாழுகின்ற தமிழ்ச் சிறார்களும் இளைஞர்களும் பங்குபற்றலாம்.

1.2 தமிழ்க் கல்வி நிலையங்களில் தமிழ் கற்கும் மாணவர்கள் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான தமது விண்ணப்பங்களை அவர்களின் தமிழ்க் கல்வி நிலையங்களுக்கூடாக அனுப்புவது விரும்பத்தக்கது.

1.3 தமிழ்க் கல்வி நிலையங்களைச் சாராத மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தனிப்பட்ட முறையில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

1.4 நியூசவுத் வேல்ஸ் மாநிலப் போட்டிகள் 16, 17, 23, 24 ஆகஸ்ட் 2008 திகதிகளில் நடைபெறும்.

1.5 முன்பு நடாத்தப்பட்டு வந்த பாடல் மனனப் போட்டி இந்த வருடத்திலிருந்து கவிதை மனனப் போட்டியாக மாற்றப்பட்டுள்ளது.

**2.0 வயதும் பிரிவுகளும்:**

2.1 3 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட தமிழ்ச் சிறார்களும் இளைஞர்களும் ஏழு (வயதுப்) பிரிவுகளில் எட்டு விதமான போட்டிகளில் பங்குபற்றலாம்.

2.2 போட்டியாளரின் வயது 01-07-2008 அன்று உள்ளபடி கணிக்கப்படும்.

2.3 இந்த ஆண்டுக்கான வயதுப் பிரிவுகளும் போட்டி வகைகளும் இணைப்பு-1 இல் தரப்பட்டுள்ளன.

2.4 ஒரு போட்டியாளர் தனது வயதுப் பிரிவிற்கான போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவார். தன்னிலும் கூடிய வயதுப் பிரிவினருக்கான போட்டிகளில் பங்குபற்ற விரும்பினால் விசேட அனுமதி பெற வேண்டும். ஆனால் தன்னிலும் குறைந்த வயதுப் பிரிவினருக்கான போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

2.5 குறிப்பிட்ட பிரிவுப் போட்டியில் பதினைந்திற்கும் மேற்பட்ட ஆண்களோ அல்லது பெண்களோ தோற்றும் பட்சத்தில், அந்தப் போட்டி ஆண் - பெண் என இரு பிரிவாக நடாத்தப்படும். இப்படி ஆண்-பெண் பிரிவிலான போட்டிகள் நடைபெறுவது போட்டி நாள் அன்றோ அல்லது இயலுமானால் முன்கூட்டியோ அறிவிக்கப்படும்.

## 3.0 போட்டிகளின் வகைகள்:

3.1 தனியொருவர் கலந்து கொள்ளும் **சாதாரண பிரிவுக்கான போட்டிகள்**:
கவிதை மனனப் போட்டி, பேச்சுப் போட்டி, வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி, எழுத்தறிவுப் போட்டி.

3.2 **குழுநிலையில் நடைபெறும் போட்டிகள்**:
விவாதப் போட்டி, வினாடி வினாப் போட்டி, பல்திறன் போட்டி

3.3 தனியொருவர் கலந்து கொள்ளும் **விசேட பிரிவிற்கான போட்டிகள்**:
8 வயதுக்குட்பட்டவர்கள்: விசேட எழுத்தறிவுப் போட்டி
10 வயதுக்குட்பட்டவர்கள்: விசேட தனி நடிப்புப் போட்டி
13 வயதுக்குட்பட்டவர்கள்: விசேட கவிதை மனனப் போட்டி (திருக்குறள்)
11 - 17 வயதுக்குட்பட்டவர்கள்: விசேட தனிநடிப்புப் போட்டி
18 - 30 வயதுக்குட்பட்டவர்கள்: விசேட எழுத்தறிவுப் போட்டி

3.4 மேற்குறிப்பிட்ட போட்டி வகைகளில் ஒரு சில போட்டிகளே அந்தந்த வயதுப் பிரிவில் நடாத்தப்பட இருப்பதனால், தயவு செய்து இணைப்பு-1 ஐப் பார்க்கவும்.

3.5 ஒரு போட்டியாளர் ஆகக்கூடியது **இரு தனிப்பட்ட போட்டிகளில்** பங்குபற்ற அனுமதிக்கப்படலாம். அவ்விரு போட்டிகளுள் ஒன்று எழுத்தறிவுப் போட்டியாக இருத்தல் வேண்டும். இந்த விதி தேசிய மட்டத்தில் நடைபெறவிருக்கும் போட்டிகளுக்கான பிரிவுகளுக்கு மட்டுமே பொருந்தும். சாதாரண போட்டியாளர்கள் விசேட பிரிவுகளில் நடைபெறும் போட்டிகளிலும், குழு நிலையில் நடைபெறும் வினாடி வினாப் போட்டி, விவாதப் போட்டி, பல்திறன் போட்டிகளிலும் மேலதிகமாக பங்குபற்றலாம்.

3.6 வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் எந்த வயதுப் பிரிவிலேனும் இறுதியாக 2007ம் ஆண்டு மாநில நிலையில் நடைபெற்ற போட்டிகளில் முதலாவது பரிசைப் பெற்ற போட்டியாளர் இந்த ஆண்டு அதே வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் எந்தப் பிரிவிலேனும் பங்குபற்றத் தகுதியுடையவராகார்.

3.7 2007ம் ஆண்டு பாலர் பிரிவிற்கான, அல்லது ஆரம்ப பிரிவிற்கான கவிதை (பாடல்) மனனப் போட்டியில் முதற் பரிசு பெற்ற மாணவர்கள் தேசிய நிலையில் நடைபெறாத கவிதை மனனப் போட்டி ஒன்றில் மீண்டும் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.
2007ம் ஆண்டு மாநில நிலையில் நடைபெற்ற பாடல் மனனப் போட்டியிலோ, பேச்சுப் போட்டியிலோ முதற்பரிசு பெற்றவர்கள் மீண்டும் இவ்வருடம் தேசிய நிலையில் கவிதை மனனப் போட்டியிலோ, பேச்சுப் போட்டியிலோ பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்.

3.8 2007ம் ஆண்டு தேசிய நிலையில் நடைபெற்ற போட்டிகளில் முதற்பரிசைப் (அதாவது தங்கப் பதக்கம்) பெற்றவர்கள் இந்த ஆண்டு அதே போட்டியில் இந்த வருடம் மாநில,

தேசிய நிலைகளில் பங்குபற்றத் தகுதியுடையவராகார். அவை தவிர்ந்த, தத்தமது வயதுப் பிரிவிற்குரிய வேறு போட்டிகளில் பங்குபற்றலாம்.

3.9 **போட்டிகள் பற்றிய விளக்கம்:** கவிதை மனனப் போட்டி, வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி, எழுத்தறிவுப் போட்டி, பேச்சுப் போட்டி, விவாதப் போட்டி, வினாடிவினா, தனிநடிப்பு, தனித்திறன் போன்ற போட்டிகளில் நாம் எதிர்பார்க்கும் திறமைகள், மதிப்பீடு செய்யும் முறை என்பன பற்றிய விளக்கம் வழங்கப்பட்டுள்ளன (இணைப்பு 2 – 11ஐப் பார்க்கவும்). அந்த வகையில் நடுவர்களின் மதிப்பீடு அமைந்திருக்கும். இந்தப் போட்டிகள் பற்றிய மேலதிக விபரங்களை எம்முடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

3.10 கடந்த வருட (2006 & 2007) எழுத்தறிவுப் போட்டிகளின் வினாத்தாள்களைப் பெற விரும்பின், எமது இணையத்தளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**4.0 வயதுப் பிரிவுகளும் போட்டிகளும்:** இணைப்பு 1 ஐப் பார்க்கவும்

4.1 **பாலர் பிரிவு:** 3-4 வயதுடையோர் (01.07.2003 இற்கும் 30.06.2005 இற்கும் இடையில் பிறந்தோர்)
- கவிதை மனனப் போட்டி – சாதாரண போட்டி

4.2 **ஆரம்பப் பிரிவு:** 5 வயதுடையோர் ( 01.07.2002 இற்கும் 30.06.2003 இற்கும் இடையில் பிறந்தோர்)
- கவிதை மனனப் போட்டி – சாதாரண போட்டி
- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி – சாதாரண போட்டி

4.3 **கீழ்ப் பிரிவு:** 6-7 வயதுடையோர் (01.07.2000 இற்கும் 30.06.2002 இற்கும் இடையில் பிறந்தோர்)
- கவிதை மனனப் போட்டி – சாதாரண போட்டி
- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி – சாதாரண போட்டி
- எழுத்தறிவுப் போட்டி – விசேட போட்டி

4.4 **மத்திய பிரிவு:** 8-9 வயதுடையோர் (01.07.1998 இற்கும் 30.06.2000 இற்கும் இடையில் பிறந்தோர்)
- எழுத்தறிவுப் போட்டி – சாதாரண போட்டி
- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி – சாதாரண போட்டி
- பேச்சுப் போட்டி – சாதாரண போட்டி
- தனி நடிப்பு – விசேட போட்டி

4.5 **மேற்பிரிவு:** 10-12 வயதுடையோர் (01.07.1995 இற்கும் 30.06.1998 இற்கும் இடையில் பிறந்தோர்)
- எழுத்தறிவுப் போட்டி – சாதாரண போட்டி
- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி
- பேச்சுப் போட்டி – சாதாரண போட்டி
- கவிதை மனனப் போட்டி (திருக்குறள்) – விசேட போட்டி

4.6 **அதிமேற்பிரிவு:** 13-17 வயதுடையோர் (01.07.1990 இற்கும் 30.06.1995 இற்கும் இடையில் பிறந்தோர்.
- எழுத்தறிவுப் போட்டி – சாதாரண போட்டி
- பேச்சுப் போட்டி – சாதாரண போட்டி
- வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி – சாதாரண போட்டி
- வினாடி வினாப் போட்டி - குழுநிலைப் போட்டி
- விவாதப் போட்டி – குழுநிலைப் போட்டி
- தனி நடிப்பு – விசேட போட்டி

4.7 **இளைஞர் பிரிவு:** 18-30 வயதுடையோர் (01.07.1978இற்கும் 30.06.1990 இற்கும் இடையில் பிறந்தோர்).

- எழுத்தறிவுப் போட்டி – சாதாரண போட்டி
- விவாதப் போட்டி – குழுநிலைப் போட்டி
- பல்திறன் போட்டி – விசேட குழுநிலைப் போட்டி

4.8 போட்டிகளுக்கான விளக்கங்களும், பொது விடயங்களும், இணைப்பு 3-10 இல் வழங்கப்பட்டுள்ளன. கவிதை மனனப் போட்டிக்கான கவிதைகளும், பேச்சுப் போட்டிக்கான பேச்சுக்களும் இணைப்பு 11-12 இல் வழங்கப்பட்டுள்ளன.

## 5.0 **அண்மையில் அவுஸ்திரேலியாவில் குடியேறிய போட்டியாளர்கள்:**

5.1 நீங்கள் கடந்த 3 ஆண்டுகளுக்குள், தமிழை முதல் மொழியாகக் கொண்ட (இலங்கை, இந்தியா) நாடுகளில் இருந்து அவுஸ்திரேலியாவிற்கு குடிபெயர்ந்தவராக இருந்தால், நீங்கள் சாதாரண பிரிவுகளுக்கென நடைபெறும் தனிப்பட்ட போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாது.

5.2 நீங்கள் கடந்த 3 ஆண்டுகளுக்குள், அவுஸ்ரேலியாவிற்கு இலங்கை, இந்தியா நாடுகளில் இருந்து குடிபெயர்ந்தவராக இருந்தால், விசேட பிரிவுகளுக்கு நடைபெறும் போட்டிகளிலேயே பங்குபற்றலாம் (தயவு செய்து 3.3ஐப் பார்க்கவும்). உங்களது தகைமையைச் சரிபார்த்துக் கொள்ள இணைப்பாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

5.3 போட்டியாளர்கள் அவுஸ்திரேலியா, நியூசிலாந்தில் குடியேறிய நாள் 01-07-2008 இல் உள்ளபடி கணிக்கப்படும்.

## **6.0 விண்ணப்ப விதிகள்:**

6.1 **புதிதாக விண்ணப்பிப்பவர்களின் கவனத்திற்கு (கடந்த வருடம் பங்குபற்றாதவர்கள்):** போட்டிகளுக்கான தமிழ்ப் பாடசாலைப் பிரதிநிதி போட்டியாளர்களின் விண்ணப்ப படிவங்களை உறுதி செய்யவேண்டும். போட்டியாளரின் வயது, பிறந்த இடம், அவுஸ்திரேலிய, நியூசிலாந்து நாடுகளில் குடியேறிய திகதி என்பன பற்றிய அத்தாட்சி (கடவுச் சீட்டு, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்) தேவைப்படின் காண்பிக்கப்பட வேண்டும். இந்த அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பத்தில் அவர்கள் போட்டிகளில் அனுமதிக்கப்பட மாட்டார்கள். எமக்குக் கிடைக்கப் பெறும் இந்த விபரங்கள் அனைத்தும் இரகசியமாக வைத்திருக்கப்படும் என்பதை உறுதிப் படுத்துகின்றோம்.

6.2 தமிழ்ப் பாடசாலையினூடாக விண்ணப்பிக்காத போட்டியாளர்கள் தமது வயது, பிறந்த இடம், அவுஸ்திரேலிய, நியூசிலாந்து நாடுகளில் குடியேறிய வருடம் என்பன பற்றிய அத்தாட்சிகளை (கடவுச் சீட்டு, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்) எமது விளக்கப் பட்டறை அன்றோ அல்லது போட்டிக்கு **1 மணி நேரத்திற்கு முன்னதாகவோ** காண்பிக்க வேண்டும். இந்த அத்தாட்சி எமக்குக் கிடைக்கப் பெறாத சந்தர்ப்பத்தில் அவர்கள் போட்டிகளில் அனுமதிக்கப்பட மாட்டார்கள். இந்த விபரங்கள் எமக்குக் கிடைக்கப் பெறும் சந்தர்பத்தில் அவை இரகசியமாக வைத்திருக்கப்படும் என்பதை உறுதிப் படுத்துகின்றோம்.

6.3 2007 ஆம் ஆண்டுப் போட்டிகளில் சுழல் / வெற்றிக் கேடயங்கள் பெற்றவர்கள் இவ்வருடம் தத்தமது போட்டி நடைபெறும் தினத்தன்று கேடயங்களை ஒப்படைக்க வேண்டும். **இவ்வாறு கேடயங்களை ஒப்படைக்கத் தவறுபவர்கள் 2008 போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.**

6.4 விண்ணப்பித்த போட்டியாளர்கள் போட்டிகள் நடைபெறவுள்ள இடத்திற்குக் குறிப்பிட்ட திகதியில் போட்டி நடைபெறுவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னர் வந்து தங்கள் பெயர்களை அங்குள்ள பொறுப்பாளர்களிடம் பதிவு செய்தல் வேண்டும். பதிவுசெய்த போட்டியாளர்கள் மாத்திரமே போட்டியில் பங்குபற்ற முடியும். போட்டி ஆரம்பித்த பின்னர் போட்டியாளர்கள் எவரும் போட்டிக்குப் பதிவு செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

6.5 இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் **24-06-2007** இற்கு முன்னர் **Coordinator, Tamil Competition, PO Box 4040, NSW 2140, Australia** என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

6.6 போட்டி நடைபெறும் இடம் நேரம் ஆகிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

**7.0 போட்டி நடைமுறைகள்:**

7.1 மேடைப் போட்டிகளின்போது பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். ஆனால் பார்வையாளர் எவரேனும் போட்டி நடைபெறும்போது போட்டியாளருக்கு எந்தவகையிலும் உதவிசெய்தல் ஆகாது.

7.2 போதிய போட்டியாளர்கள் பங்குபற்றினால், ஆண்கள் / பெண்கள் பிரிவு என போட்டிகள் நடைபெறும். போட்டியாளர்கள் போட்டியில் பங்குபற்றும் வரிசைக்கிரமம் சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.

7.3 போட்டிகள் நடைபெறும் போது கையடக்க (நடமாடும்) தொலைபேசிப் பிரயோகம் தடைசெய்யப்பட்டுள்ளது. பெற்றோர் தத்தமது பிள்ளைகளின் போட்டியின் போது மட்டும் புகைப்படம், வீடியோ (ஒளிப்படம்) எடுக்கலாம், ஆனால் ஏனைய போட்டியாளர்களை புகைப்படம், வீடியோ ஒளிப்படம் எடுத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

**8.0 பெறுபேறுகளும் பரிசுகளும்**

8.1 போட்டியின் பெறுபேறு பற்றி நடுவர்கள் கூறும் தீர்ப்பே முடிவானதாகும். இந்தப் பெறுபேறுகள் எமது பரீட்சை சபையினால் சரிபார்த்தபின் இயலுமானவரை போட்டிநாள் அன்றே வெளியிடப்படும். எழுத்துப் பரீட்சைக்கான பெறுபேறுகள் கடிதம் அல்லது மின்னஞ்சல் (email) மூலம் அறிவிக்கப்படும்.

8.2 8 வயதுக்குட்பட்டவர்களுக்கான போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறுவோருக்கு - ஒவ்வொரு போட்டியிலும் மிகச் சிறப்பாகத் தேர்ச்சியடையும் போட்டியாளருக்கு வெற்றிக் கேடயம் பரிசாக வழங்கப்படும். இந்தப் போட்டியாளர்களுக்கு முதலாம் பிரிவு, இரண்டாம் பிரிவு, சாதாரண பிரிவு என்ற வகையில் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். பரிசு பெறத்தவறியவர்களுக்கு பங்குபற்றியதற்கான சான்றிதழ் வழங்கப்படும்.

8.3 8 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்கள்: 1ஆம், 2ஆம், 3ம் பரிசுகளுடன், முதலாம் பிரிவில் வருவோருக்கு ஆறுதல் பரிசுகளும், வழங்கப்படும். போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழ்கள் (முதலாம், இரண்டாம், சாதாரண பிரிவு எனவும், ஏனையோருக்கு பங்குபற்றியமைக்கான சான்றிதழ்களும் வழங்கப்படும்.

8.4 வெற்றி பெறும் போட்டியாளர்களுக்கான பரிசில்கள் **அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கத்தின் பரிசளிப்பு விழாவில்** வழங்கப்படும். மேடைப் போட்டிகளில் **80%** புள்ளிகளுக்கு மேல் பெற்று, முதலாவது இடத்தைப்பெற்ற திறமைமிக்க ஒரு வெற்றியாளர்கள் மட்டும் மேடையில் தோன்றி தமது திறமையை வெளிப்படுத்த அனுமதிக்கப்படுவர்கள். இதில் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிக் குழுவின் முடிவே இறுதியானது.

8.5 நீங்கள் கேட்குமிடத்து, எழுத்தறிவுப் போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்களுக்கு அவர்களது தகைமை பற்றிய விபரங்கள் அடங்கிய சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படும்.

**9.0 போட்டிக்கான அனுமதிக் கட்டணம்:**

9.1 இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான வெற்றிக் கேடயங்களையும் மற்றும் பரிசுகளையும் பல நலன்விரும்பிகளும் பல்வேறுபட்ட தமிழ் நிறுவனங்களும் வழங்கிய

போதிலும் போட்டி ஒழுங்குகளுக்கான செலவுகளின் ஒரு பகுதியை ஈடு செய்வதுடன் போட்டிகளைத் தொடர்ந்து எதிர்வரும் வருடங்களிலும் நடாத்துவதற்காகவும் மேலதிக நிதி தேவைப்படுகின்றது. இதற்காக பங்குபற்றும் ஒவ்வொரு போட்டியாளாரிடமும் இருந்து ஒவ்வொரு போட்டிக்கும் **$5.00** கட்டணமாக அறவிடப்படும்.

9.2 பல போட்டிகளில் பங்குபற்றும் ஒரு போட்டியாளரிடம் அதிகபட்சமாக $15 மட்டுமே கட்டணமாக அறவிடப்படும். ஒரு குடும்பத்தில் பல போட்டியாளர் பங்குபற்றும் சந்தர்ப்பத்தில் அந்தக் குடும்பத்திடம் ஆகக்கூடியது $30 மட்டுமே கட்டணமாக அறவிடப்படும்.

9.3 போட்டியாளர்கள் தாம் பங்குகொள்ளுகின்ற அனைத்துப் போட்டிகளுக்குமான மொத்தக் கட்டணத்தையும் ஒரே முறையில் செலுத்த வேண்டும். கட்டணங்களை பிரித்துச் செலுத்த எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். ஒரே தடவையில் செலுத்துவதன் மூலமே மேற்குறிப்பிட்ட (9.2) சலுகையைப் பெறலாம்.

9.4 போட்டிக்கான பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவத்துடன் உங்கள் காசோலையுடன் (in favour of `Tamil Competitions') அனுப்பி வைக்கலாம். அல்லது உங்கள் பாடசாலைப் பிரதிநிதியிடம் கையளிக்கலாம். அல்லது போட்டி நடைபெறும் தினத்தன்று நீங்கள் இக்கட்டணத்தைச் செலுத்தலாம்.

## 10.0 தேசிய மட்டத்தில் நடைபெறும் போட்டிகள்:

10.1 அனைத்து எழுத்தறிவுப் போட்டிகளும், பேச்சுப் போட்டிகளும், கவிதை மனனப் போட்டிகளும் மாநில மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் நடாத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மற்ற மாநிலங்களில் பங்கு கொள்ளும் மாணவர்களின் தொகையே இதனைத் தீர்மானிக்கும். ஒவ்வொரு போட்டிகளிலும் முதல் மூன்று பரிசுகளைப் பெறும் போட்டியாளர்கள் மட்டும் தேசியப் போட்டிக்கு அனுமதிக்கப்படுவார்கள். மாநிலப் போட்டிகள் முடிந்த நிலையில் எத்தனை பேர் எந்தெந்த பிரிவிற்கான போட்டிகளில் தேசிய மட்டத்தில் அனுமதிக்கப்படுவார்கள் என்பதனை அறியத் தருவோம்.

10.2 தேசியப் போட்டிகள் சனிக்கிழமை, 4ம் திகதி ஒக்டோபர் மாதம் 2008 இல் சிட்னியில் நடைபெறும். தேசியநிலைப் போட்டிக்கென சிட்னி வரும் மாணவர்களுக்கு அவர்கள் தங்கவேண்டிய காலத்திற்கு இடவசதி வழங்க முயற்சிப்போம். அவர்களுக்கு சிட்னியில் வேறும் சில பொழுது போக்கு வசதிகளும் செய்து கொடுக்கப்படும். சிட்னியில் தேசிய போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில் தேசிய தமிழ் வானொலிகளிலும், தொலைக்காட்சியிலும் அவர்கள் பங்குபற்ற வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

10.3 தேசிய மட்டத்தில் முதற் பரிசு பெறும் போட்டியாளருக்கு தங்கப் பதக்கம் பரிசளிக்கப்படும். தேசிய மட்டத்தில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்களும், சான்றிதழ்களும் இவ்வாண்டு ஒக்டோபர் மாதம் 5ம் திகதி சிட்னியில் நடைபெறும் எமது பரிசளிப்பு விழாவில் வழங்கப்படும்.

## 11.0 பரீட்சை சபை

11.1 கடந்த வருடம் முதல் நாம் பரீட்சை சபை ஒன்றை நியமித்துள்ளோம். அதில் 5 தமிழ்ப் பெரியார்கள் அங்கம் வகிக்கின்றனர். அவர்கள் இந்தப் போட்டிகளைக் கண்காணித்து நிர்வாகக் குழுவிற்கு பரிந்துரைகள் வழங்குவார்கள். அத்துடன் அவர்கள் பெறுபேறுகளை ஆராய்ந்து சரியாக பரிசுகள் வழங்கப்படுவதையம் உறுதி செய்வார்கள்.

11.2 போட்டிகள் சம்பந்தப்பட்ட முறைப்பாடுகள் ஏதேனும் இருப்பின், அவற்றை போட்டிகளின் இணைப்பாளரிடம் தெரிவிக்கவேண்டும். இணைப்பாளரின் விளக்கத்திலோ அல்லது பதிலிலோ திருப்தி இல்லாதவிடத்து, அவற்றை எழுத்தில் பரீட்சை சபைக்கு அனுப்பி

வைக்கலாம். முறைப்பாடு கிடைக்கப்பெற்று 2 கிழமைகளுக்குள் பரீட்சை சபையினர் அந்த முறைப்பாட்டிற்கான பதிலை எழுத்தில் தெரிவிப்பார்கள்.

## 12.0 நேர அட்டவணை

போட்டிகளுக்கான நேர அட்டவணை இங்கு கொடுக்கப்படவில்லை. நேர அட்டவணையில் மாற்றங்கள் இடம்பெறலாம் என்ற காரணத்தினால், விண்ணப்ப முடிவு திகதியின் பின் போட்டிகளுகான நேர அட்டவணை தமிழ்ப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும். இந்தப் போட்டிகளுக்கான நேர அட்டவணையை எமது இணையத்தளத்திலும் (www.kalappai.org) பெற்றுக் கொள்ளலாம். போட்டிகளுக்கான நேர அட்டவணையைப் பெறத் தவறியோர் எம்முடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம். போட்டிகளுக்கு முன்னர் இந்த நேர அட்டவணையைச் சரிபார்த்துக் கொள்வது உங்கள் பொறுப்பு ஆகும்.

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2008
# அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு–1**

## போட்டிகளும் வயதுப் பிரிவுகளும்

| போட்டி | சாதாரண போட்டிகள் | பிரிவு | வயது | பிறந்த திகதி |
|---|---|---|---|---|
| PP | கவிதை மனனப் போட்டி | பாலர் பிரிவு | 3-4 வயது | 01.07.2003 - 30.06.2005 |
| BP | கவிதை மனனப் போட்டி | ஆரம்ப பிரிவு | 5 வயது | 01.07.2002 - 30.06.2003 |
| BV | வாய்மொழித் தொடர்பாற்றல் | ஆரம்ப பிரிவு | 5 வயது | 01.07.2002 - 30.06.2003 |
| LP | கவிதை மனனப் போட்டி | கீழ்ப் பிரிவு | 6-7 வயது | 01.07.2000 - 30.06.2002 |
| LV | வாய்மொழித் தொடர்பாற்றல் | கீழ்ப் பிரிவு | 6-7 வயது | 01.07.2000 - 30.06.2002 |
| IV | வாய்மொழித் தொடர்பாற்றல் | மத்திய பிரிவு | 8-9 வயது | 01.07.1998 - 30.06.2000 |
| IW | எழுத்தறிவுப் போட்டி | மத்திய பிரிவு | 8-9 வயது | 01.07.1998 - 30.06.2000 |
| IS | பேச்சுப் போட்டி | மத்திய பிரிவு | 8-9 வயது | 01.07.1998 - 30.06.2000 |
| SV | வாய்மொழித் தொடர்பாற்றல் | மேற்பிரிவு | 10-12 வயது | 01.07.1995 - 30.06.1998 |
| SW | எழுத்தறிவுப் போட்டி | மேற்பிரிவு | 10-12 வயது | 01.07.1995 - 30.06.1998 |
| SS | பேச்சுப் போட்டி | மேற்பிரிவு | 10-12 வயது | 01.07.1995 - 30.06.1998 |
| AdSW | எழுத்தறிவுப் போட்டி | அதிமேற்பிரிவு | 13-17 வயது | 01.07.1990 - 30.06.1995 |
| AdSV | வாய்மொழித் தொடர்பாற்றல் | அதிமேற் பிரிவு | 13-17 வயது | 01.07.1990 - 30.06.1995 |
| AdSS | பேச்சுப் போட்டி | அதிமேற் பிரிவு | 13-17 வயது | 01.07.1990 - 30.06.1995 |

### விசேட போட்டிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| SpLV | விசேட எழுத்தறிவுப் போட்டி | கீழ்ப் பிரிவு | 8 வயதின் கீழ் | 01.07.2000 க்குப்பின் |
| SpSP | கவிதை மனனப் போட்டி | மேற்பிரிவு | 13 வயதின் கீழ் | 01.07.1995 க்குப்பின் |
| SpIA | தனிநடிப்பு | மத்திய பிரிவு | 10 வயதின் கீழ் | 01.07.1998 க்குப்பின் |
| SpYA | தனிநடிப்பு | அதிமேற் பிரிவு | 11-17 வயது | 01.07.1998 – 30.06.1998 |
| SpYW | விசேட எழுத்தறிவுப் போட்டி | இளைஞர் பிரிவு | 18 - 30 வயது | 01.07.1978 - 30.06.1990 |

### குழுநிலைப் போட்டிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| AdSQ | வினாடி வினாப் போட்டி | அதிமேற் பிரிவு | 18 வயதின் கீழ் | 01.07.1990 க்குப்பின் |
| AdSD | விவாதப் போட்டி | அதிமேற் பிரிவு | 18 வயதின் கீழ் | 01.07.1990 க்குப்பின் |
| YD | விவாதப் போட்டி | இளைஞர் பிரிவு | 18-30 வயது | 01.07.1978 - 30.06.1990 |
| YT | பல்திறன் போட்டி | இளைஞர் பிரிவு | 18-30 வயது | 01.07.1978 - 30.06.1990 |

குறிப்பு: இங்கு நிழல்ப்படுத்தப்பட்ட போட்டிகள் அனைத்தும் தேசிய நிலையிலும் போட்டியாக நடாத்தப்படும். ஒவ்வொரு மாநிலத்திலும் மேலுள்ள அட்டவணையிலிருந்து போட்டிகள் தெரிந்தெடுக்கப்பட்டு நடாத்தப்படும். எனவே எல்லாப் போட்டிகளும் எல்லா மாநிலங்களிலும் நடாத்தப்படும் சாத்தியம் இருக்காது. தேசிய நிலைப் போட்டிகள் எல்லா மாநிலங்களிலும் நடாத்த முயற்சிகள் எடுக்கப்படும்.

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2008
# அவுஸ்திரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

இணைப்பு–2

## விண்ணப்பப் படிவம் APPLICATION FORM

**குடும்பப் பெயர்:** …………………………….. ……………………………………(in English)

**முதற் பெயர்:** ……………………………….. ……………………………………(in English)

**பிறந்த திகதி:** …………………………………… **பிறந்த நாடு:**……………………………………

**முகவரி:**………………………………………………………………………………………

**மின் அஞ்சல் முகவரி:**…………………………………………………………………….....

**தொலைபேசி:** …………………………………… **கையடக்கத் தொலைபேசி:**……………………

**அவுஸ்திரேலியாவில் அல்லது நியூசிலாந்தில் பிறக்காதவராயின் நீங்கள் குடிபெயர்ந்த திகதி:** ……….

**நீங்கள கற்கும் தமிழ்ப் பாடசாலை:** ……………………………………………………….........

**2008 இல் பங்குபற்றும் போட்டி/போட்டிகள்:**

| சாதாரண போட்டிகள் | விசேட போட்டிகள் | குழுநிலைப் போட்டிகள் |
|---|---|---|
| | | |
| | | |

செலுத்த வேண்டிய கட்டணம்: (போட்டிகளின் எண்ணிக்கை) ……… x $5.00 = ……………

எமது போட்டி விதிமுறைகள் அனைத்தும் வாசித்து விளங்கி கொண்டேன் என்றும், அந்த விதிமுறைகளுக்கு இணங்கி இந்த விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்கின்றேன் என்றும் உறுதியளிக்கின்றேன். அத்துடன் போட்டி விதிகளுக்கிணங்க, எனது விண்ணப்பப் படிவம் சரியான விபரங்களைக் கொண்டுள்ளதாகவும் உறுதி செய்கின்றேன். இந்த விபரம், அல்லது விபரங்கள் பிழையெனத் அறியவரும் வேளையில் நான் போட்டியிலிருந்து விலக்கப்படலாம் என்பதையும் அறிவேன்.

________________________ ____________________

கையொப்பம்(பங்குபற்றுபவர் / பெற்றோர்) திகதி:

மேற்குறிப்பிட்ட விபரங்கள் எனது அறிவுக்கு எட்டியவரை சரியென உறுதியளிக்கின்றேன்.

________________________ ____________________

ஆசிரியர் / அதிபரின் கையொப்பம் திகதி:

## பொது விதிமுறைகள் - தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 2008

1) போட்டியாளரின் வயது 01-07-2008 இலுள்ளபடி கணிக்கப்படும்.
2) இந்த ஆண்டுக்கான வயதுப் பிரிவுகளும், போட்டி வகைகளும் தரப்பட்டுள்ளன.
3) ஒரு போட்டியாளர் ஆகக்கூடியது **இரு தனிப்பட்ட போட்டிகளில்** பங்குபற்ற அனுமதிக்கப்படலாம். இந்த விதி தேசிய மட்டத்தில் நடைபெறவிருக்கும் போட்டிகளுக்கான பிரிவுகளுக்கு மட்டுமே பொருந்தும். அதாவது கீழ்ப் பிரிவிலிருந்து அதிமேற் பிரிவு வரை. அப்படியாக ஒரு போட்டியாளர் தான் தெரிவு செய்யும் இரு போட்டிகளுள் எழுத்தறிவுப் போட்டியை ஒரு போட்டியாக எடுக்க வேண்டும். அத்துடன் விசேட மற்றும், குழு நிலைப் போட்டிகளில் போட்டியாளர்கள் மேலதிக பங்குபற்றலாம்.
4) **வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் எந்த வயதுப் பிரிவிலேனும் இறுதியாக 2007ம் ஆண்டு மாநில நிலையில் நடைபெற்ற போட்டிகளில் முதலாவது பரிசைப் பெற்ற போட்டியாளர் இந்த ஆண்டு வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டியில் எந்தப் பிரிவிலேனும் பங்குபற்றத் தகுதியுடையவராகார்.**
5) **2007ம் ஆண்டு பாலர் பிரிவிற்கான, அல்லது ஆரம்ப பிரிவிற்கான பாடல் மனனப் போட்டியில் முதற் பரிசு பெற்ற மாணவர்கள் தேசிய நிலையில் நடைபெறாத கவிதை மனனப் போட்டி ஒன்றில் மீண்டும் பங்குபற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**
**2007ம் ஆண்டு தேசிய நிலையில் நடைபெற்ற எழுத்தறிவுப் போட்டி, பாடல் மனனப் போட்டி, பேச்சுப் போட்டியில் முதற்பரிசு (அதாவது தங்கப் பதக்கம்) பெற்றவர்கள் மீண்டும் இவ்வருடம் அவர்கள் பங்குபற்றிய போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.**
6) 3 வருடங்களுக்குள் இந்தியா அல்லது இலங்கையிலிருந்து வந்து இங்கு குடியேறியவர்களுக்கென 8, 10, 13, 18, 30 வயதுக்குட்பட்டவர்கள் என மூன்று பிரிவுகளில் விசேட போட்டிகள் நடாத்தப்படும். அவர்கள் சாதராணப் பிரிவுப் போட்டிகளில் பங்குபற்ற முடியாது என்பதை அறியத் தருகின்றோம்.
7) போட்டியாளரின் வயது, பிறந்த இடம், அவுஸ்திரேலிய, நியூசிலாந்து நாடுகளில் குடியேறிய திகதி என்பன பற்றிய அத்தாட்சி (Passport or Birth certificate) தேவைப்படின் காண்பிக்கப்பட வேண்டும். இந்த அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்படாத சந்தர்ப்பத்தில் அவர்கள் போட்டிகளில் அனுமதிக்கப்பட மாட்டார்கள். எமக்குக் கிடைக்கப் பெறும் இந்த விபரங்கள் அனைத்தும் இரகசியமாக வைத்திருக்கப்படும் என்பதை உறுதிப் படுத்துகின்றோம்.
8) 2007ஆம் ஆண்டுப் போட்டிகளில் சுழல் / வெற்றிக் கேடயங்கள் பெற்றவர்கள் 2008 இல் தத்தமது போட்டிகளுக்கு முன்பாக கேடயங்களை ஒப்படைக்க வேண்டும். **இவ்வாறு கேடயங்களை ஒப்படைக்கத் தவறுபவர்கள் 2008 போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.**
9) ஒவ்வொரு போட்டிக்கும் $5.00 கட்டணமாக அறவிடப்படும். பல போட்டிகளில் பங்குபற்றும் ஒரு போட்டியாளர் அதிகபட்சமாக $15 மட்டுமே கட்டணமாக செலுத்தவேண்டும். ஒரு குடும்பத்தில் பல போட்டியாளர் பங்குபற்றும் சந்தர்ப்பத்தில் அந்தக் குடும்பத்திடம் ஆகக்கூடியது $30 மட்டுமே கட்டணமாக அறவிடப்படும்.
10) இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் யாவும் **24-06-2008** இற்கு முன்னர் **Coordinator, Tamil Competition, PO Box 4040, NSW 2140** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

### அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

போட்டி: சரி / பிழை வயது பிரிவு: சரி / பிழை இல:............

கட்டணம்: ............... செலுத்தப்பட்டது / செலுத்தப்படவில்லை

குறிப்பு:..........................................................................................................

போட்டி இணைப்பாளர்:............................................திகதி:....................................

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2008
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

## இணைப்பு: 3

## கவிதை மனனப் போட்டிக்களுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்:

1. **கவிதை மனனப் போட்டி - (பாலர் பிரிவு, ஆரம்ப பிரிவு, கீழ்ப் பிரிவு)**
   போட்டிக்குக் கொடுக்கப்படும் கவிதைகளை மனனஞ் செய்து கூறல் வேண்டும். ஆனால் அவற்றின் பொருளைக் கூறவேண்டியதில்லை. பாலர் பிரிவிலும், ஆரம்ப பிரிவிலும் ஒவ்வொரு போட்டியாளருக்கும் 3 நிமிடங்களும், கீழ்ப்பிரிவில் ஒவ்வொரு போட்டியாளருக்கும் 5 நிமிடங்களும் வழங்கப்படும்.

2. **விசேட மனனப் போட்டி - (மேற் பிரிவு)**
   இப்போட்டிக்கு 10 திருக்குறள்கள் பொருளுடன் கொடுக்கப்படும். எல்லாத் திருக்குறள்களையும் மனனஞ் செய்து பொருளுடன் கூறல் வேண்டும். ஒவ்வொரு போட்டியாளருக்கும் 5 நிமிடங்கள் மாத்திரமே கொடுக்கப்படும். பத்துக் குறள்களையும் பொருளுடன் தமிழில் மனனஞ் செய்து ஒப்புவிக்கவேண்டும்.

3. போட்டிகளுக்கெனச் சிறுவர்களுக்கான கவிதைகள் கொடுக்கப்பட்டுள்ளன. போட்டியின் போது உச்சரிப்பு(30%), பொருளுணர்ந்து கூறுதல் (25%), சபை மரபும் ஆதிக்கமும் (30%) மனனஞ் செய்யும் திறமை (15%), ஆகியன கவனிக்கப்படும். போட்டியாளரின் முகவுரை சுருக்கமானதாக அமையவேண்டும்.

4. **உச்சரிப்புத் திறன்** (30 %)
   - முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள, / ண, ன, ந / ற, ர, ட வேறுபாடுகள் வல்லின, மெல்லின வேறுபாடுகளையும் அறிந்திருக்க வேண்டும்.
   - தூய தமிழ் உச்சரிப்பு (As opposed to English accent)
   - சொற்களை விழுங்காது ஒப்புவித்தல்
     (குறிப்பாக வசனத்தின் இறுதியில் வரும் சொற்கள்)
   - குழந்தைகளின் மழலைத் தமிழுக்கு புள்ளிகள் குறைக்கப்பட மாட்டாது.

5. **பொருள் உணர்ந்து கூறும் திறன்** (25%),
   - பொருத்தமான முறையில் சொற்களைப் பிரித்தல்
   - ஏற்ற இறக்கங்களோடு முக்கியமான சொற்களை அழுத்திக் கவிதையைக் கூறுதல்
   - வரிகளுக்குத் தகுந்த உணர்ச்சி:(மிகையான உணர்ச்சிகள், முரணான சைகைகள், செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள் போன்றவற்றிற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

6. **சபை மரபு - ஆதிக்கத்திறன்** (30%)
   - மண்டபத்துள் நுழையும் போதும், வெளியேறும் போதும் சரியான நிலையில் தம்மை வைத்திருத்தல். (நெளிதல், வளைதல்களைத் தவிர்த்தல் வேண்டும்)
   - அடக்கமாகவும், தன்னம்பிக்கையுடனும் சபையையும் நடுவர்களையும் மரியாதை செய்து கவிதையை ஆரம்பித்தல்.
   - கவிதையை ஒப்புவிக்கும்போது உடலை நேராகவும், தளர்வாகவும் வைத்திருத்தல். (விறைப்பாக நிற்பதையும்,செயற்கை அபிநயங்களையும் தவிர்த்தல்)

- ❖ சபையில் உள்ள அனைவரையும் பார்த்து ஒப்புவித்தல். (குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவர்களை மட்டும் பார்ப்பதையோ, நிலத்தை, சுவரை, கூரையை மட்டும் பார்ப்பதையோ தவிர்த்தல்.)
- ❖ முக பாவனை: கவிதையின் பொருளை அனுபவித்து, ரசித்து ஒப்புவிக்கும் பாங்கு.
- ❖ முக்கியமாக கவிதையைக் கவிதை நடையில் கூறவேண்டும்.

7) மனனஞ் செய்யும் திறன் (15%)

- ❖ சொற்களைத் தவறவிடாது, மாற்றாது முழுவதையும் கூறுதல். (கவிதை வரிகளைத் தவறவிடுமிடத்தோ, அல்லது மாற்றுமிடத்தோ புள்ளிகள் குறைக்கப்படும்.)
- ❖ சரளமான ஆற்றொழுக்கான ஒப்புவிப்பு (தடுமாற்றத்துடன் விழித்துக் கொண்டு நிற்றல், ஒரே வரியை தடுமாற்றம் காரணமாக திரும்பச் சொல்லுதல் ஆகியவற்றிற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
- ❖ எழுத்துப் பிரதியையோ அல்லது துணைக்குறிப்பையோ பார்த்து கவிதையைக் கூறமுடியாது. இதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
- ❖ கவிதை வரியை மறந்து போகுமிடத்து, நடுவரில் ஒருவர் போட்டியாளர் விட்ட இடத்திலிருந்து தொடங்க உதவலாம். அவ்வாறு உதவி பெறுமிடத்து, புள்ளிகள் குறைக்கப்படும்.
- ❖ போட்டி நடைபெறும் வேளையில் போட்டியாளர்களைச் சார்ந்த பார்வையாளர்கள்(பெற்றோர்) எந்த விதமான உதவியும் செய்யக்கூடாது.

8. போட்டிகளுக்கான பொது விதிமுறைகள்:

- ❖ போட்டியாளர்கள் பங்குகொள்ளும் ஒழுங்கு சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.
- ❖ நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய விபரங்களையும், நேர அட்டவணையையும் போட்டிகளுக்கு ஒரு மாதம் முன்னதாக தமிழ்ப் பாடசாலைகளிலும், எமது இணையத்தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம். இந்த விபரங்களைப் பெறத்தவறின் எம்முடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
- ❖ உங்கள் விண்ணப்பப் படிவத்தை முழுமையாக நிரப்பாதுவிட்டாலோ அல்லது பிழையான தரவுகள் தரப்பட்டாலோ இப்போட்டியில் பங்குபற்ற அனுமதி மறுக்கப்படலாம் என்பதை அறியத்தருகின்றோம். இம்முறை எல்லாப் போட்டியாளர்களும் தமது பிறந்த திகதி, அவுஸ்திரேலியாவிற்கோ, நியூசிலாந்திற்கோ குடியேறிய திகதி விபரங்களை சமர்ப்பிக்கவேண்டும்.
- ❖ போட்டிகளுக்கான கவிதை பெற்றுக் கொள்ளாதவர்கள் அவற்றை எமது இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.
- ❖ போட்டி ஆரம்ப நேரத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும். தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது கடவுச் சீட்டினைக் காண்பிக்கத்தவறியோர் போட்டி ஆரம்ப நேரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும்.
- ❖ விண்ணப்பக் கட்டணத்தை(ஒரு போட்டிக்கு $5.00) முன்கூட்டியே செலுத்தி அசௌகரிகத்தைக் குறைக்கவும்.
- ❖ உங்கள் மின்னஞ்சல் விபரத்தையும், உங்களுடன் நாங்கள் தொடர்பு கொள்ளவேண்டின் நீங்கள் பெரிதும் விரும்பும் தொடர்பாடல் முறையையும் குறிப்பிடத் தவறாதீர்கள்.

9) மேலதிக விபரங்களுக்கு போட்டிகளுக்குரிய முழுமையான எமது விதிமுறைகளை வாசிக்கவும். அல்லது எம்முடன் கீழுள்ள வழிகளில் தொடர்பு கொள்ளலாம்.

10) போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டியிலிருந்து விலக்கப்படுவார். எமது பரீட்சை சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது என்பதையும் அறியத்தருகின்றோம்.

தமிழ் ஊக்குவிப்புப் குழு
அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2008
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

## இணைப்பு: 4

## பேச்சுப் போட்டிகளுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்:

1) மத்திய பிரிவிற்கும் (8-9 வயது), மேற்பிரிவிற்கும் (10-12 வயது), அதிமேற்பிரிவிற்கும் (13-17 வயது) பேச்சுகள் எம்மால் எழுதி வழங்கப்படும். போட்டியாளர் தமக்குக் கொடுக்கப்படும் பேச்சினை மனனஞ் செய்து 5 நிமிடங்களுக்குள் பேச வேண்டும்.

2) இந்த மூன்று பிரிவுகளுக்குமான பேச்சுப் போட்டிகளும் மாநில மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் நடாத்தப்படும். மாநில மட்டத்தில் முதல் மூன்று பரிசுகளைப் பெறும் போட்டியாளர்கள் தேசியநிலைப் போட்டிக்கு அனுமதி பெறுவர்.

3) போட்டியாளரின் பேசும் திறன் பின்வரும் அம்சங்களில் கவனிக்கப்படும். **உச்சரிப்பு** (30%), **பொருளுணர்ந்து பேசுதல்** (25%), **சபைமரபும் ஆதிக்கமும்** (25%), **மனனஞ்செய்தல்** (20%), என்ற வகையாகக் கணிக்கப்படும்.

4) **உச்சரிப்புத் திறன்** (30 %)
- முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள, / ண, ன, ந / ற, ர, ட வேறுபாடுகள் வல்லின, மெல்லின வேறுபாடுகளையும் அறிந்திருக்க வேண்டும்.
- தூய தமிழ் உச்சரிப்பு
  (As opposed to English accent)
  அன்றாட பேச்சுத் தமிழ் அல்லாத பேச்சு
- சொற்களை விழுங்காது பேசுதல் (குறிப்பாக வசனத்தின் இறுதியில் வரும் சொற்கள்)

5) **பொருள் உணர்ந்து பேசும் திறன்** (25%),
- பொருத்தமான முறையில் சொற்களைப் பிரித்தல்
- ஏற்ற இறக்கங்களோடு முக்கியமான சொற்களை அழுத்தி உச்சரித்துப் பேசுதல்
- வினா, வியப்பிசைக்குறி வரும் இடங்களில் தகுந்தவாறு கையாளுதல்
  (உ+ ம்: "அது எங்கே ?" என்பதை "அது எங்கே" போலப் பேசுதல் ஆகாது)
- வசனங்களுக்குத் தகுந்த உணர்ச்சி:(மிகையான உணர்ச்சிகள், முரணான சைகைகள், செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள் போன்றவற்றிற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

6) **சபை மரபு - ஆதிக்கத்திறன்** (25%)
- நுழையும் போதும், வெளியேறும் போதும் சரியான நிலையில் தம்மை வைத்திருத்தல். (நெளிதல், வளைதல்களைத் தவிர்த்தல் வேண்டும்)
- அடக்கமாகவும், தன்னம்பிக்கையுடனும் சபையையும் நடுவர்களையும் மரியாதை செய்து பேச்சை ஆரம்பித்தல். ("தாரகை நடுவில் தண்மதி போல வீற்றிருக்கும் நடுவர்களே..." போன்ற மிகைப்படுத்தப்பட்ட வசனங்களுக்கு மேலதிக புள்ளிகள் கிடையாது.)
- பேசும்போது உடலை நேராகவும், தளர்வாகவும் வைத்திருத்தல். (விறைப்பாக நிற்பதையும், செயற்கை அபிநயங்களையும் தவிர்த்தல்)
- சபையில் உள்ள அனைவரையும் பார்த்துப் பேசுதல்.(குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவர்களை மட்டும், நிலத்தை, சுவரை, கூரையை பார்ப்பதையோ தவிர்த்தல்.)
- முக பாவனை: பேச்சின் பொருளை அனுபவித்து, ரசித்துப் பேசும் பாங்கு.

- தகுந்த வேகத்துடன் பேச்சை ஒப்புவித்தல்.
  (மிக வேகமாகவோ, மிக மெதுவாகவோ பேசுவதைத் தவிர்த்தல்.)

7) **மனனஞ் செய்யும் திறன் (20%)**
- வசனங்களையோ பந்திகளையோ தவறவிடாது பேச்சு முழுவதையும் கூறுதல்.
- எழுத்துப் பிரதியையோ, குறிப்புக்களையோ பார்த்து வாசித்தல் ஆகாது.
  அதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
- வசனத்தை மறந்து போகுமிடத்து, நடுவரில் ஒருவர் போட்டியாளர் தொடர்வதற்கு உதவி செய்யலாம். அவ்வாறு உதவி பெறுமிடத்து, புள்ளிகள் குறைக்கப்படும்.
- சரளமான ஆற்றொழுக்கான பேச்சு (தடுமாற்றத்துடன் விழித்துக் கொண்டு நிற்றல், ஒரே வசனத்தை தடுமாற்றம் காரணமாக திரும்பச் சொல்லுவதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)
- போட்டி நடைபெறும் வேளையில் போட்டியாளர்களைச் சார்ந்த பார்வையாளர்கள் (பெற்றோர்) எந்த விதமான உதவியும் செய்யக்கூடாது. அதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.

8) **போட்டிகளுக்கான பொது விதிமுறைகள்:**
- போட்டியாளர்கள் பங்குகொள்ளும் ஒழுங்கு சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.
- நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய விபரங்களையும், நேர அட்டவணையையும் போட்டிகளுக்கு ஒரு மாதம் முன்னதாக தமிழ்ப் பாடசாலைகளிலும், எமது இணையத்தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம். இந்த விபரங்களைப் பெறத்தவறின் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
- உங்கள் விண்ணப்பப் படிவத்தை முழுமையாக நிரப்பாதுவிட்டாலோ அல்லது பிழையான தரவுகள் தரப்பட்டாலோ இப்போட்டியில் பங்குபற்ற அனுமதி மறுக்கப்படலாம் என்பதை அறியத்தருகின்றோம். இம்முறை எல்லா போட்டியாளர்களும் தமது பிறந்த திகதி, அவுஸ்திரேலியாவிற்கு, நியூசிலாந்திற்கு குடியேறிய திகதி விபரங்களை சமர்ப்பிக்கவேண்டும்.
- போட்டிகளுக்கான பேச்சை எமது இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.
- போட்டி ஆரம்ப நேரத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும். தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது கடவுச் சீட்டினை காண்பிக்கத்தவறியோர் போட்டி ஆரம்ப நேரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும்.
- விண்ணப்பக் கட்டணத்தை(ஒரு போட்டிக்கு $5.00) முன்கூட்டியே செலுத்தி அசௌகரிகத்தைக் குறைக்கவும்.
- உங்கள் மின்னஞ்சல் விபரத்தையும், உங்களுடன் நாங்கள் தொடர்பு கொள்ளவேண்டின் நீங்கள் பெரிதும் விரும்பும் தொடர்பாடல் முறையையும் குறிப்பிடத் தவறாதீர்கள்.

9) மேலதிக விபரங்களுக்கு போட்டிகளுக்குரிய முழுமையான எமது விதிமுறைகளை வாசிக்கவும். அல்லது எம்முடன் கீழுள்ள வழிகளில் தொடர்பு கொள்ளலாம்.

10) போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டியிலிருந்து விலக்கப்படுவார். எமது பரீட்சை சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது என்பதையும் அறியத்தருகின்றோம்.

**தமிழ் ஊக்குவிப்புப் குழு**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2008
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

## இணைப்பு: 5

### வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டிக்களுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்:

1. இப்போட்டிகள் பின்வரும் வயதுப்பிரிவுகளில் நடாத்தப்படும்.
   ஆரம்பப் பிரிவு - 5 வயது கீழ்ப் பிரிவு - 6-7 வயது
   மத்திய பிரிவு - 8-9 வயது மேற்பிரிவு - 10-12 வயது அதிமேற் பிரிவு – 13-17வயது

2. இப்போட்டி, நாளாந்தம் வீட்டில் குடும்ப அங்கத்தினருக்கிடையேயும், தமிழ் கல்வி நிலையங்கள் மற்றும் தமிழ் சமூகத்தினரின் திருமணங்கள், தமிழ் கலாசார நிகழ்ச்சிகள் ஒன்றுகூடல் போன்ற பொது வைபவங்களில் இடம்பெறக்கூடிய உரையாடல்களைப் போன்றதாக இருக்கும். உலகத் தமிழ் சமுதாயம் சம்பந்தமானதாகவும் அவரவர் வயதுப்பிரிவிற்கேற்ப வேறுபட்ட தரங்களில் அமைந்திருக்கும். மேற்பிரிவு போட்டியாளர்கள் அவர்களின் பெற்றோரின் தாய்நாடு பற்றியும் அங்குள்ள சமகால நிலமை பற்றியும் அறிந்திருத்தல் விரும்பத்தக்கது.

3. இவ்வுரையாடல் சுமார் 7-10 நிமிடங்களுக்கு இடம்பெறும். ஒவ்வொரு போட்டியாளரிடமும் அறிமுகக் கேள்விகளுடன், குறைந்தது 5 கேள்விகள் கேட்கப்படும். இதில் உரையாடலுக்குத் தான் முக்கியமே தவிர போட்டியாளர்களின் பதில் தரவுகளின் நியாயப்பாடு, சரி/பிழைக்குப் புள்ளிகள் இல்லை. அத்துடன் இம்முறை, வாசித்தல் பகுதியும் இந்தப் போட்டியின் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. படங்கள் முதல் தமிழ்க் கட்டுரையின் ஒரு பந்தி வரை வேறுபட்ட விடயங்கள் பிரிவிற்கேற்ப வழங்கப்படும்.

4. போட்டியாளர்கள் அனைவரும் போட்டி நடைபெறும் மண்டபம் அல்லாத ஒரு அறையில் இருக்கவேண்டும். ஒவ்வொருவராக அழைக்கப்படும் போட்டியாளர் மட்டும் போட்டி நடைபெறும் மண்டபத்திற்கு வர அனுமதிக்கப்படுவார். இப்போட்டிகளின் போது பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள். இந்தவேளையில் பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் முன்னுரிமை வழங்கப்படும். போட்டியாளரின் பெற்றோர் முன்கூட்டியே மண்டபத்தில் வந்து இருக்கலாம் அல்லது தமது பிள்ளைகளை அழைக்கும் போது அவர்களுடன் மண்டபத்துள் வரலாம். ஏற்கனவே போட்டிகளை பார்த்த பெற்றோருக்கும், குடும்பத்தினருக்கும், போட்டி நடைபெறும் மண்டபத்தில் இருந்து வெளியேறிவிட்டுப் போட்டியில் பங்குபற்ற இருக்கின்ற தமது பிள்ளைகளை சந்திக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

5. போட்டியின் போது **உச்சரிப்பு (15 %), சொற்பிரயோகம் (20 %), உரையாடும் திறனும் & பங்குபற்றும் நிலையும் (50 %), தமிழ் வாசிப்பு (15 %)** ஆகியன கவனிக்கப்படும்.

6. **உச்சரிப்புத் திறன் (15 %)**
   - பிராந்தியப் பேச்சு வழக்கு, அதாவது தமிழ்நாடு, தமிழீழம், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் உச்சரிப்புகளும், அவர்களது பேச்சு வழக்குகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.
   - முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள, / ண, ன, ந / ற, ர, ட வேறுபாடுகள்
   - வல்லின, மெல்லின வேறுபாடு அறிந்து தெளிவாக உரையாடுதல்
   - தூய தமிழ் உச்சரிப்பு (As opposed to English accent)
   - சொற்களை விழுங்காது உரையாடுதல்

7. **சொற்பிரயோகம் (20 %)**
   - தெளிவான, தூய தமிழ் மொழி நடையாக உரையாடல் இருத்தல் வேண்டும்.
   - ஒரு தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கில வார்த்தை பயன்படுத்தினால் அதற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

(உதாரணமாக: `பந்து' என்பதற்குப் பதிலாக `Ball' என்று பாவிப்பது தவிர்க்க வேண்டும்).

- ஒரு ஆங்கிலச் சொல்லுக்கு உரிய தமிழ் பதம் இல்லாதவிடத்தில் அதே சொல்லை அதே உச்சரிப்புடன் பயன்படுத்தலாம். உ+ம்: Australia, calculator, Video, DVD, CD எனும் பொதுப் பாவனையிலுள்ள சொற்கள் ஏற்கப்படும்.
- கேள்விகள் விளங்காவிட்டால், போட்டியாளர் கேள்வியை மீண்டும் ஒரு முறை வினாவும்படி கேட்கலாம். அப்படியும் கேள்விகள் விளங்காத சந்தர்ப்பத்தில், வேறு தமிழ்ச் சொல்லுடன் சற்று இலகு தமிழில் கேட்கப்படலாம்.

8. உரையாடும் திறனும் & பங்குபற்றும் நிலையும் (50 %)

○ பல விதமான வினாக்களுக்கும் சரியான அளவான பதில் அளிக்கும் தன்மை.

- விரிவான பதில் எதிர்பார்க்கப்படும் (Open ended question) வினா, உ+ம்:
  உங்களுடைய மறக்கமுடியாத ஒரு சம்பவம் பற்றி கூறுங்கள்?
- சுருக்கமான பதில் எதிர்பார்க்கப்படும் (Close ended question) வினா, உ+ம்:
  உங்களுக்குப் பிடித்த ஒரு பறவையின் பெயரைச் சொல்லுங்கள்?

- சரளமாக உரையாடும் தன்மை. அநாவசியமான, அளவிற்கதிகமான, அதிகப்பிரசங்கித்தனமான, உரையாடலுக்கும், வெட்டொன்றாக அமையும் ஒரு வரிப் பதில்களுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். உரையாடலை ரசித்துப் பங்குகொள்ளும் தன்மை. அத்துடன் உணர்ச்சிகளுக்கு சரியான முகபாவனைகள் காட்டப்பட வேண்டும்.
- போட்டியாளர்கள் நடுவர்களைப் பார்த்து (good eye contact), தன்னம்பிக்கையுடன், உரையாடுதல். (குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவர்களில் ஒருவரை மட்டும் பார்ப்பதையோ, நிலத்தை, கூரையை மட்டும் பார்ப்பதையோ தவிர்த்தல் வேண்டும். உரையாடலின் போதும் கேள்விகள் கேட்கப்படும் போதும் அலட்சியமாக இருப்பதைத் தவிர்த்தல் வேண்டும்)
- அடக்கமாகவும், சபையையும் நடுவர்களையும் மரியாதை செய்து உரையாடல்.
- கேள்வி கேட்கப்படும் போது குறுக்கீடு செய்யக்கூடாது. குறுக்கீடு செய்வதனால் கேள்வியை அவதானிக்காது, திரும்பவும் கேள்வியைக் கேட்டால் அதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.
- சைகைகளினால் வழங்கப்படும் பதில்களுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும்.

9. தமிழ் வாசிப்பு (15 %)

- மொழி கற்றலில் 'வாசித்தல்' மிக முக்கியமானது. சிறிய வயதுப் பிரிவிற்கு படங்களை அல்லது எழுத்துக்களைக் காட்டி அவர்களுடன் உரையாடல் நடாத்தப்படும்.
- மற்றப் பிரிவினருக்கு வசனங்களையோ, ஒரு தமிழ்க் கட்டுரையின் பந்தியையோ வாசிக்கும்படி கேட்கப்படும். இந்த வசனங்கள், பந்திகள் தமிழ்ப் பாடப் புத்தகங்களிலிருந்து தெரிவு செய்யப்படும்.
- அதிமேற்பிரிவினருக்கான பந்திகள் தமிழ் நூல், செய்தித்தாள், அல்லது சஞ்சிகைகளிலிருந்து பெறப்படும்.
- இங்கு உச்சரிப்பு, சரளமாக வாசிக்கும் திறன், பொருள் உணர்ந்து வாசித்தல் என்பன கவனிக்கப்படும்.

10) போட்டிகளுக்கான பொது விதிமுறைகள்:

- போட்டியாளர்கள் பங்குகொள்ளும் ஒழுங்கு சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.
- நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய மேலதிக விபரங்களையும், நேர அட்டவணையையும் போட்டிகளுக்கு ஒரு மாதம் முன்னதாக தமிழ்ப் பாடசாலைகளிலும், எமது இணையத்தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம். இந்த விபரங்களைப் பெறத்தவறின் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
- போட்டி ஆரம்ப நேரத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும்.
- விண்ணப்பக் கட்டணத்தை(ஒரு போட்டிக்கு $5.00) முன்கூட்டியே செலுத்தி அசௌகரிகத்தை குறைக்கவும்.
- மேலதிக விபரங்களுக்கு போட்டிகளுக்குரிய முழுமையாக எமது விதிமுறைகளை வாசிக்கவும் அல்லது எம்முடன் கீழுள்ள வழிகளில் தொடர்பு கொள்ளலாம்.
- போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டியிலிருந்து விலக்கப்படுவார்.
- எமது பரீட்சை சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது.

**தமிழ் ஊக்குவிப்புக் குழு**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2008
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## Tamil Competition - Australian Society of Graduate Tamils

## இணைப்பு: 6

### எழுத்தறிவுப் போட்டிகளின் விதிமுறைகளும் விளக்கங்களும்:

1) கீழ்ப்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி(6-7 வயது): இது ஒரு மணி நேரப் பரீட்சை ஆகும்.
2) மத்தியபிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி(8-9 வயது): இது 1 மணி 30 நிமிட நேரப் பரீட்சை ஆகும். இதற்கான மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
3) மேற்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி(10-12 வயது): இது 1 மணி 30 நிமிட நேரப் பரீட்சை ஆகும். இதற்கான மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
4) அதிமேற்பிரிவிற்கான எழுத்தறிவுப் போட்டி(13-17 வயது): இது 1 மணி 30 நிமிட நேரப் பரீட்சை ஆகும். இதற்கான மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

5) **விஷேட எழுத்தறிவுப் போட்டி: (1 மணி 30 நிமிட நேரப் பரீட்சை).** 18 - 30 வயதிற்கு உட்பட்ட எவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
போட்டி இரண்டு பகுதிகளைக் கொண்டதாக அமைந்திருக்கும்.

<u>**முதல் பகுதியில்**</u> **உள்ள 50 வினாக்களில், முதல்** 40 வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் நான்கு விடைகள் கொடுக்கப்படும். அவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அடையாளமிடும் படி கேட்கப்படுவர். அடுத்துள்ள 10 வினாக்கள் கோடிட்ட இடங்களை நிரப்புவனவாக அமைந்திருக்கும். போட்டியாளர்கள் கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொல்லை எழுதும்படி கேட்கப்படுவர்.

<u>**இரண்டாவது பகுதியில்,**</u> கொடுக்கப்பட்டுள்ள ஒரு தலைப்பின் கீழ் சுமார் 150 சொற்களைக் கொண்ட கட்டுரை அல்லது கடிதம் அல்லது கவிதை ஒன்றினை எழுதும்படி கேட்கப்படுவர்.

6) எழுத்தறிவுப் போட்டிகள் நியூசவுத் வேல்ஸ் தமிழ் பாடசாலைகளின் பாடத்திட்டத்தைத் தழுவியதாக அமையும். அவுஸ்திரேலிய மொழிக்கல்வி தொடர்பான அணுகுமுறையும் (approach), விடயதானமும் (contents), அடைவுகளும் (outcomes) எல்லா மாநிலங்களுக்கும் பொதுவானவை என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.
7) எழுத்தறிவுப் போட்டிகள் மநாநில, தேசிய மட்டங்களில் நடாத்தப்படுகின்றன. எனவே மாநில மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். அவுஸ்திரேலிய, நியூசிலாந்து மாணவர்களிடையே முதற் பரிசு பெறும் போட்டியாளருக்கு தங்கப் பதக்கம் வழங்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம்.
8) ஒவ்வொரு பிரிவிற்கும் அதற்கான மாதிரி வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. கடந்த வருடப் பரீட்சையிலிருந்து 15 சதவீத வினாக்களும், வேறும் இந்த வகையான கேள்விகளும் வேறுசில கேள்விகளும் இடம்பெறலாம்.

9) போட்டிகளுக்கான பொது விதிமுறைகள்:

- நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய விபரங்களையும், நேர அட்டவணையையும் போட்டிகளுக்கு ஒரு மாதம் முன்னதாக தமிழ்ப் பாடசாலைகளிலும், எமது இணையத்தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம். இந்த விபரங்களைப் பெறத்தவறின் எம்முடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
- கடந்த ஆண்டு (2006, 2007) எழுத்தறிவுப் போட்டிகளுக்கான வினாத்தாள்கள் எமது இணையத்தளத்திலிருந்து (www.kalappai.org) பெறலாம்.
- போட்டி ஆரம்ப நேரத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும். தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது கடவுச் சீட்டினை காண்பிக்கத்தவறியோர் போட்டி ஆரம்ப நேரத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாக மண்டபத்திற்கு வரவேண்டும்.
- விண்ணப்பக் கட்டணத்தை (ஒரு போட்டிக்கு $5.00) முன்கூட்டியே செலுத்தி அசௌகரிகத்தை குறைக்கவும்.
- மேலதிக விபரங்களுக்கு போட்டிகளுக்குரிய முழுமையான எமது விதிமுறைகளை வாசிக்கவும். அல்லது எம்முடன் கீழுள்ள வழிகளில் தொடர்பு கொள்ளலாம்.

10) போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டியிலிருந்து விலக்கப்படுவார். எமது பரீட்சை சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது.

**தமிழ் ஊக்குவிப்புப் குழு,**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2008
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 7**

## விவாதப் போட்டிக்களுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்:

1. போதிய குழுக்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் போட்டிகள் அரை இறுதிப் போட்டி, இறுதிப் போட்டி என்ற இருநிலைகளில் இடம் பெறும். போட்டிக்கான தலைப்புக்கள் போட்டியிடும் குழுவினருக்கு அறிவிக்கப்படும்.

2. இப்போட்டியில் மேற்குறிப்பிட்ட வயதுப்பிரிவுக்குட்பட்ட தகுதியுடைய போட்டியாளர்கள் மும்மூன்று போட்டியாளர்களைக் கொண்ட குழுக்களாக விண்ணப்பிக்க வேண்டும்.

3. போட்டியாளர்கள் விவாதத்தின் போது துணைக்குறிப்புகளைப் பயன்படுத்தலாம். ஆனால் தமது விவாதத்தினை எழுத்துப் பிரதியிலிருந்து வாசிக்கக் கூடாது. எழுத்துப் பிரதியிலிருந்து வாசிக்கும் போட்டியாளர்களுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.

4. விவாதக் குழுவினைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் தனித் தனியே 5 நிமிடங்கள் கொடுக்கப்படும். 5 நிமிடங்கள் முடிந்ததும் மணி ஒருமுறை அடிக்கப்படும். தொடர்ந்து அவர் பேசினால் 30 வினாடிகளுக்குப் பின் மணி இரு முறை அடிக்கப்படும். இரண்டாவது மணி அடித்தவுடன் அவர் பேச்சை நிறுத்த வேண்டும். 5 நிமிடங்களுக்கு மேலாக பேசுமிடத்தும், 3 நிமிடங்களுக்குக் குறைவாகப் பேசுமிடத்தும் புள்ளிகள் குறைக்கப்படும்.

5. மூன்று போட்டியாளர்களும் பேசி முடிந்த பின் விவாதக் குழுவின் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் விவாதத்தினை முடித்து தொகுப்புரை வழங்குவதற்கு 3 நிமிடங்கள் கொடுக்கப்படும். ஆதரித்துப் பேசும் குழுவின் தலைவர் விவாதத்தை முடித்து வைப்பார்.

6. விவாதத்தில் கவனிக்கப்படும அம்சங்கள் + புள்ளிகள் வழங்கப்படும் விபரங்கள்:
   - ❖ தான் சார்ந்த அணிக்கு ஆதரவாக முன்வைக்கும் கருத்துக்களும், அவற்றின் தரமும்
   - ❖ எதிர் அணியினர் கூறிய கருத்துக்களுக்கு மறுத்துக் கூறும் கருத்துக்களும், அவற்றின் தரமும்
   - ❖ தேவை ஏற்படின் தன் அணி ஏற்கனவே முன்வைத்த கருத்தை மீண்டும் வலியுறுத்திக் கூறலாம். ஆனால் தேவையற்ற சந்தா்ப்பத்தில் தன் அணி ஏற்கனவே முன்வைத்த கருத்தை மீண்டும் கூறுவதால் எவ்வித மேலதிக புள்ளிகளும் கிடைக்கமாட்டாது.
   - ❖ அணித் தலைவர் தொகுப்புரையில் ஏற்கனவே தன் அணி முன்வைத்த கருத்துகளின் சாராம்சத்தை வழங்கவேண்டும். அத்துடன் தாம் மறுத்துக் கூறிய கருத்துக்களையும் தொகுத்து வழங்குவதன் மூலம், தமது அணியின் கருத்து-பேச்சு வன்மையை நிலை நிறுத்த வேண்டும்.
   - ❖ விவாதக் களத்தில் தலைப்போடு ஒன்றிய விடயங்களே பேசப்படவேண்டும். வாதியையோ, பிரதிவாதியையோ தனிப்பட்ட முறையில் சாடுவதையும், அவரவர் தனிப்பட்ட விடயங்களைப் பற்றிப் பேசுவதையும் தவிர்க்கவேண்டும்.

7. விவாதம் பற்றிய பொதுவான விளக்கங்களையும், மேலதிக அறிவையும் பெற `world debate wbsite' http://www.flynn.debating.net/sydrules.htm ல் பெற்றுக் கொள்ளலாம்.

8 விவாதக் குழுக்கள் எந்தெந்தத் தரப்பில் வாதிடுவர் என்பது சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும். அரை இறுதிப் போட்டிகள் மூலம் இறுதிப்போட்டிக்கு பங்குபற்றத் தகுதி உடைய குழுக்கள் தேர்ந்தெடுக்கப்படும். அரை இறுதிப் போட்டி முடிவடைந்ததும் இறுதிப் போட்டிக்கான தலைப்புக் கொடுக்கப்படுவதுடன் விவாதத்தை ஆதரித்து, எதிர்த்து பேசுவதற்கான ஒழுங்கு, சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.

9 ஒவ்வொரு வயதுப்பிரிவிலும் இறுதிப் போட்டியில் பங்குபற்றி சிறந்ததெனத் தெரிந்தெடுக்கப்படும் குழுவிற்கு முதல் பரிசும் அடுத்த குழுவிற்கு ஆறுதல் பரிசும் வழங்கப்படும்.

**10. மற்றைய போட்டிகளின் போட்டிகளுக்கான பொது விதிமுறைகளைப் பார்க்கவும்.**

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2008
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 8**

## தமிழ்க் குழு வினாடி - வினாப் போட்டியின் விதிமுறைகளும் விளக்கங்களும்:

1. போதிய குழுக்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் போட்டிகள் அரை இறுதிப் போட்டி, இறுதிப் போட்டி என்ற இருநிலைகளில் இடம் பெறும்.
2. இப்போட்டியில் 18 வயதிற்குறப்பட்டவர்கள் ஐந்து போட்டியாளர்களைக் கொண்ட குழுக்களாக விண்ணப்பிக்க வேண்டும்.
3. கேட்கப்படும் கேள்விகள் தமிழ் மொழி, மற்றும் கலாசாரம் சம்பந்தப்பட்டதாக இருக்கும். சில வரலாறு தொடர்பான கேள்விகளும், பொதுக் கேள்விகளும் கேட்கப்படும்.

4. வினா கேட்கப்பட்ட போட்டியாளர் மற்றவர்களுடன் **கலந்தாலோசிக்காது**, அந்த வினாவிற்கான சரியான பதிலை அளித்தால் 5 புள்ளிகள் வழங்கப்படும். அவர் பிழையாகப் பதிலளித்தாலோ அல்லது தனக்குக் கொடுக்கப்பட்ட 30 வினாடிகளுக்குள் பதிலளிக்காத சந்தர்ப்பத்தில், அந்தக் குழுவிவைச் சேர்ந்த வேறு யாவராவது தம்மிடையே **கலந்தாலோசித்தபின்** சரியான பதிலளித்தால் 3 புள்ளிகள் வழங்கப்படும். கேட்கப்பட்ட குழு பதிலளிக்கத்தவறும் பட்சத்தில் எதிர் அணியினிடம் அந்த வினா கேட்கப்படும். எதிர் அணியினர் தம்மிடையே **கலந்தாலோசித்தபின்** யாராவது ஒருவர் அந்த வினாவிற்கு பதிலளிக்கும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு 2 புள்ளிகள் வழங்கப்படும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் 30 வினாடிகள் கொடுக்கப்படும். பிழையான விடைகளுக்கு புள்ளிகள் ஏதும் கழிக்கப்படமாட்டாது.

5. வினாக்கள் மாறிமாறி இரு குழுக்களிடையேயும் கேட்கப்படும். ஒவ்வொரு குழுவிலும் கேள்விகள் முதலாம் போட்டியாளரிலிருந்து இறுதிப் போட்டியாளர் வரை கேட்கப்படும்.
6. விடைகளை தெளிவான உச்சரிப்புடன் வழங்கவேண்டும்.

7. போட்டிகள் இரண்டு சுற்றுகளாக நடைபெறும். இரண்டாவது சுற்றின் பின் கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறும் அணி வெற்றி பெறும். அரையிறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணி, இறுதிப் போட்டிக்கு தெரிவாகும். இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணி முதற்பரிசையும், இரண்டாவதாக வரும் அணி ஆறுதல் பரிசையும் பெறும்.
8. இறுதிச் சுற்றில் இரு அணிகளும் ஒரேயளவு புள்ளிகளைப் பெறுமிடத்து மூன்றாம் சுற்று நாடாத்த வேண்டிய தேவை ஏற்படலாம். மூன்றாம் சுற்றில் ஒவ்வொரு கேள்வியும் குழுநிலையில் விடை அளிக்க அனுமதியளிக்கப்படும். குழுவின் தலைவர் மற்ற குழு அங்கத்தவர்களிடம் கலந்துரையாடியபின், 30 வினாடிகளுக்குள் தமது விடையை தெரிவிக்க வேண்டும். அவர்கள் சரியான விடையை அளிக்கத் தவறும் பட்சத்தில், எதிர் அணியினரிடம் அந்த வினா கேட்கப்படும். அதற்கான விடையை எதிரணியும் குழு நிலையில் ஆலோசித்தபின் அக்குழுவின் தலைவர் இந்த வினாவிற்கான விடையை 30 வினாடிகளுக்குள் அளிக்கலாம்.

9. **போட்டிகளுக்கான பொது விதிமுறைகள்:**
   - நீங்கள் பங்குபற்றும் போட்டிகள் பற்றிய மேலதிக விபரங்களையும், நேர அட்டவணையையும் போட்டிகளுக்கு ஒரு மாதம் முன்னதாக தமிழ்ப் பாடசாலைகளிலும், எமது இணையத்தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம். இந்த விபரங்களைப் பெறத்தவறின் எம்முடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
   - மேலதிக விபரங்களுக்கு போட்டிகளுக்குரிய முழுமையான எமது விதிமுறைகளை வாசிக்கவும் அல்லது எம்முடன் கீழுள்ள வழிகளில் தொடர்பு கொள்ளலாம்.
   - போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டியிலிருந்து விலக்கப்படுவார். எமது பரீட்சை சபையின் (Board of Examiners) தீர்ப்பே இறுதியானது என்பதையும் அறியத்தருகின்றோம்.

தமிழ் ஊக்குவிப்புக் குழு, அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2008
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 9**

## தனிநடிப்புப் போட்டிகளுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்:

1) 10 வயதுக்குட்பட்டோர், 11 - 17 வயதுக்குட்பட்டோர், என்ற இரண்டு விசேட பிரிவுகளில் நடைபெறும். போட்டியாளர் தமக்குக் கொடுக்கப்படும் கருப் பொருளை ஓட்டிய செய்தியை வெளிக்காட்டும் வகையில் நடித்துக் காட்ட வேண்டும். இந்த நடிப்பு 3 நிமிடங்களுக்கு குறையாமலும், 5 நிமிடங்களுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

2) **போட்டிக்கான கருப்பொருள்:** 'யாவரையும் மதிப்போம் நாமாக இருப்போம்' என்பதாகும். இந்த கருப் பொருளுடன் கூடிய தலைப்பு ஒன்றில் (சுருக்கமான செய்தி) நீங்கள் நடித்துக் காட்ட வேண்டும்.

3) போட்டியாளரின் நடிப்புத் திறன் பின்வரும் அம்சங்களில் கவனிக்கப்படும். **கருவோடு ஒன்றிய செய்தி-விடயம்-வெளிப்பாடு (30%), பாத்திரத்தோடு ஒன்றிய நடிப்பு (50%), மேடை உத்திகள், ஒப்பனை (20%)** என்ற வகையாகக் கணிக்கப்படும்.

4) **கருவோடு ஒன்றிய செய்தி-விடயம்-வெளிப்பாடு (30%),**
   - போட்டியாளர் எடுத்துக் கொண்ட தலைப்புச் செய்தியானது (கருத்து), யாவரையும் மதிப்போம் நாமாக இருப்போம் என்ற எமது கருப்பொருளோடு ஒட்டியதானதாகவும், சமூக விழுமியங்களுக்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும்.
   - நடிப்பானது தழுவல் இல்லாத சுய தயாரிப்பாக இருத்தல் வேண்டும்.
   - நெறியாள்கையும் கவனித்தில் கொள்ளப்படும்.

5) **பாத்திரத்தோடு ஒன்றிய நடிப்பு (50%)**
   - எடுத்துக் கொண்ட கதாபாத்திரத்தை அல்லது கருத்தை சரியாகவும், தெளிவாகவும் வெளிப்படுத்தும் முகமாக நடித்தல்.
   - மேடை நடிப்பின் அடிப்படை அம்சங்களுக்கு அமைய நடித்தல் (மேடைக் கூச்சத்தைத் தவிர்த்தல் வேண்டும்: நடித்துக் காட்டுதல்: அங்க அசைவுகளும் அவற்றின் மேல் நடிப்பவரின் கட்டுப்பாடும், தெளிவான விளக்கமான நடிப்பு சொற்பிரயோகம், இயல்பான நடிப்பு.
   - வசனங்களுக்குத் தகுந்த உணர்ச்சி:(மிகையான உணர்ச்சிகள், முரணான சைகைகள், செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.)
   - தொய்வில்லாத நடிப்புத் தொடர்ச்சியும் ஒழுங்கமைக்கபட்ட நடிப்பும்.

6) **மேடை உத்திகள், ஒப்பனை (20%),**
   - நடிப்பு உத்திகள் - உ + ம்: குறியீடுகள், பல பாத்திரம் ஏற்றல், மேடைப் பயன்பாடு
   - ஒப்பனை காதாபாத்திரத்திற்கும், எடுத்துக் கொண்ட கருப் பொருளுக்கும் இயைபாக இருக்கவேண்டும். ஒவ்வாத, மிகையான ஒப்பனையைத் தவிர்க்க வேண்டும்.
   - ஒலி, ஒளி, மேடை அமைப்புக்கு புள்ளிகள் ஏதும் வழங்கப்பட மாட்டாது.
   - மேடையில் அன்று கிடைக்கக்கூடிய வசதிகளைத் தவிர எந்த மேடை வசதிகளும் செய்து கொடுக்கப்பட மாட்டாது. மேடை விபரங்களைப் பற்றி அறிய விரும்பின் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.
   - மேடை அமைப்புக்கு மேலதிக நேரம் வழங்கப்பட மாட்டாது. மேடை அமைப்பு ஏனைய போட்டியாளர்களுக்கு இடையூறாக இருக்காது பார்த்துக் கொள்ளவேண்டும்.

8) **போட்டிகளுக்கான பொது விதிமுறைகளை மற்ற போட்டிகளில் பார்க்கவும்.**

தமிழ் ஊக்குவிப்புக் குழு, அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2008
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 10**

## இளைஞர் பல்திறன் போட்டிக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்:

1) இளைஞர் பல்திறன் போட்டி இந்த வருடம் முதல் முறையாக அறிமுகமாகின்றது. 18 - 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கான விசேட போட்டியாக இடம்பெறும். இரு போட்டியாளர்கள் கொண்ட குழுவாகப் பங்குபற்றவேண்டும்.
2) போட்டியின் போது நகைச்சுவைத் திறன், உடனே சிந்திக்கும் திறன் (thinking on the spot), மற்றும் சபை மரபு ஆகியவை கவனிக்கப்படும். உச்சரிப்பும் சொற்பிரயோகமும் பொருத்தமாக இருக்கவேண்டும்.
3) இத் தனித்திறன் போட்டி 5 - 6 நிமிடங்களுக்கு இடம்பெறும்.

4) **போட்டிக்கான கருப்பொருள்:** 'யாவரையும் மதிப்போம் நாமாக இருப்போம்' என்பதாகும். போட்டியின் தொடக்கத்தில் ஒவ்வொரு குழுவிற்கும் இந்தக் கருப் பொருளுடன் கூடிய தலைப்பு (சூழ்நிலை) சீட்டிழுப்பின் மூலம் கொடுக்கப்படும். சூழ்நிலைகள் பாடசாலை அல்லது குடும்பம் அல்லது தமிழ்க் கலாசாரம் சம்பந்தப்பட்டவையாக அமையும். குழுவில் இருக்கும் இருவரும் இந்த சூழ்நிலைக்கு ஏற்ப தங்கள் நகைச்சுவையுடன் கூடியதாக நடித்தோ, பேசியோ, பாடியோ, ஆடியோ தமது திறன்களை வெளிப்படுத்தலாம். ஆனால் ஒரு வகையான திறன் அதீதமாக (குறிப்பாக பாடலோ அல்லது ஆடலாகவோ) இருத்தல் கூடாது.

5) போட்டியாளரின் நடிப்புத் திறன் பின்வரும் அம்சங்களிற் கவனிக்கப்படும். **கருவோடு ஒன்றிய செய்தி-விடயம்-வெளிப்பாடு** (30%), **குழுவின் முழுத்திறன்** (50%), **நகைச்சுவையுடன் கூடிய சபை ஆதிக்கம்** (20%) என்ற வகையாகக் கணிக்கப்படும்.

6) **கருவோடு ஒன்றிய செய்தி-விடயம்-வெளிப்பாடு** (30%),
- போட்டியாளர் எடுத்துக் கொண்ட தலைப்புச் செய்தியானது (கருத்து), 'யாவரையும் மதிப்போம் நாமாக இருப்போம்' என்ற எமது கருப்பொருளோடு ஒட்டியதாகவும், சமூக விழுமியங்களுக்கு அமைவதாகவும் இருத்தல் வேண்டும்.
- தழுவல் இல்லாத சுய தயாரிப்பாக இருத்தல் வேண்டும்.

7) **குழுவின் முழுத்திறன்** (50%)
- எடுத்துக் கொண்ட கதாபாத்திரத்தை அல்லது கருத்தை சரியாகவும், தெளிவாகவும் வெளிப்படுத்தும் முகமாக நடித்தல், பேசுதல், பாடுதல், ஆடுதல்.
- மேடையில் உங்கள் நிகழ்வு தனியே ஒரு அம்சத்தைக் (முழுமையாக பாடலாகவோ அல்லது நடனமாகவோ) கொண்டதாக இருக்கக்கூடாது.
- தொய்வில்லாத தொடர்ச்சியான ஒழுங்கமைக்கபட்ட நிகழ்வு முக்கியம்.

8) **நகைச்சுவையுடன் கூடிய சபை ஆதிக்கம்** (20%),
- கருத்தோடு ஒட்டிய நகைச்சுவை உங்கள் நிகழ்வில் எதிர்பார்க்கப்படும்.
- நகைச்சுவையுடன் புதிய உத்திகள் பாவிக்கப்படலாம்.
- மேடையில் அன்று கிடைக்கக்கூடிய வசதிகளைத் தவிர எந்த மேடை வசதிகளும் செய்து கொடுக்கப்பட மாட்டாது.

9) **போட்டிகளுக்கான பொது விதிமுறைகளை மற்றைய போட்டிகளில் பார்க்கவும்.**

தமிழ் ஊக்குவிப்புப் குழு, அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்

**தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2008**
**அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்**
**Tamil Competition - Australian Society of Graduate Tamils**

**இணைப்பு: 11**

## கவிதை மனனப் போட்டி - பாலர் பிரிவு (3 – 4 வயது)

(பிறந்த திகதி: 01.07.2003 - 30.06.2005)

### எங்கள் வீட்டுப் பூனை

சின்னச் சின்னப் பூனை
சிறந்த நல்ல பூனை
என்னைப் பார்த்துத் துள்ளும்
எங்கள் வீட்டுப் பூனை.

வட்டமான கண்கள்
வண்ணமான செவிகள்
கட்டையான கால்கள்
காட்டும் நல்ல பூனை.

- வித்துவான் வேந்தனார் (கவிதைப் பூம்பொழில்)

---

## கவிதை மனனப் போட்டி – ஆரம்பப் பிரிவு ( 5 வயது)

(பிறந்த திகதி: 01.07.2002 - 30.06.2003)

### கங்காரு

தாவிப் பாய்ந்து ஓடுவேன்
தளையும் புல்லும் உண்டிடுவேன்
பாவி போல நானிருப்பேன்
பாய்ந்தால் பாய்ச்சல் வேகந்தான்.

எங்கும் பாய்ந்து ஓடுவேன்
எவர்க்கும் அச்சம் இல்லையே
கங்கா ரென்றே என்னையும்
காணும் மக்கள் அழைப்பரே.

எந்தத் தேசம் ஆயினும்
எனக்குச் சொந்தம் இல்லையாம்
இந்த அவுஸ்திரேலியா
எனக்குச் சொந்தம் தெரியுமோ?

நா. மகேசன் (சிறுவர் பாடல்கள்)

## கவிதை மனனப் போட்டி
## கீழ் பிரிவு ( 6-7 வயது)
(பிறந்த திகதி: 01.07.2000 - 30.06.2002)

# இளமைப் பருவம்

1. இளமைப் பருவம் இனிய பருவம்
எழுச்சி நல்கும் பருவம்
விளையும் அன்பும் தொண்டும் வாழ்வில்
விருந்து செய்யும் பருவம்.

2. மலையைத் தூக்கித் தலையில் வைக்க
மார்பு தட்டும் பருவம்
கலைகள் கற்றுப் புலமை யாலே
கருத்து மலரும் பருவம்.

3. இன்னல் கோடி வாழ்வில் வந்து
எதிர்த்து நின்ற போதும்
தன்ன லத்தைப் பேணி டாத
சால்பு கொண்ட பருவம்.

4. சென்ற கால நிகழுங் காலச்
செயல்கள் யாவும் சேர்ந்தே
என்றும் வாழும் எதிர்கா லத்தை
இயற்றும் இளமைப் பருவம்.

வித்துவான் வேந்தனார்
(கவிதைப் பூம்பொழில்)

---

# திருக்குறள் போட்டி (விசேட மேற்பிரிவு- 13 வயதின் கீழ்)

(பிறந்த திகதி: 01.07.1995 க்குப்பின்)

## அதிகாரம்: அடக்கமுடைமை

1. குறள்:

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதநூஉங் கில்லை உயிர்க்கு.

*பொருள்: அடக்கத்தை உறுதிப்பொருளாகக்கொண்டு போற்றிக் காக்கவேண்டும். அந்த அடக்கத்தைவிடமேம்பட்ட ஆக்கம் உயிர்க்கு இல்லை.*

2. குறள்:

நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

*பொருள்: தன் நிலையிலிருந்து மாறுபடாமல் அடங்கி ஒழுகுவோனுடைய உயர்வு, மலையின் உயர்வைவிட மிகவும் பெரிதாகும்.*

3. குறள்:

யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

*பொருள்: காக்கவேண்டியவற்றுள் எவற்றைக் காக்காவிட்டாலும் நாவையாவது காக்கவேண்டும். காக்கத் தவறினால் சொற்குற்றத்தில் அகப்பட்டுத் துன்பமடைவர்.*

4. குறள்:

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

*பொருள்: நெருப்பினால் சுட்ட புண் புறத்தே வடு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனால் நாவினால் தீயசொல் கூறிச் சுடும் வடு என்றும் ஆறாது.*

## அதிகாரம்: கேள்வி

5. குறள்:

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

*பொருள்: செவிக்குக் கேள்வியாகிய உணவு இல்லாத போது (அதற்குத் துணையாக உடலை ஓம்புமாறு) வயிற்றுக்கும் சிறிது உணவு தரப்படும்.*

6. குறள்:

கற்றில னாயினும் கேட்க அஃ.தொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை.

*பொருள்:* *நூல்களைக் கற்கவில்லையாயினும், கற்றறிந்தவரிடம் கேட்டறியவேண்டும். அது ஒருவனுக்குத் தளர்ச்சிவந்தபோது ஊன்றுகோல்போல் துணையாகும்.*

7. குறள்:

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

*பொருள்:* *எவ்வளவு சிறியதாயினும் நல்லவற்றைக் கேட்டறியவேண்டும். கேட்ட அந்த அளவிற்கு அவை நிறைந்த பெருமையைத் தரும்.*

## அதிகாரம்: நட்பு

8. குறள்:

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு.

*பொருள்:* *பழகப் பழக நற்பண்பு உடையவரின் நட்பு இன்பம் தருவது, நூலின் நற்பொருள் கற்கக் கற்க மேன்மேலும் இன்பம் தருதலைப் போன்றதாகும்.*

9. குறள்:

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.

*பொருள்:* *முகம் மட்டும் மலரும்படியாக நட்புச்செய்வது நட்பு அன்று. நெஞ்சமும் மலரும்படியாக உள்ளன்புகொண்டு நட்புச்செய்வதே நட்பு ஆகும்.*

10. குறள்:

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

*பொருள்:* *உடுத்திருக்கும் உடை நெகிழ்ந்தவனுடைய கை, உடனே உதவி செய்வதுபோல், (நண்பனுக்குத் துன்பம் வந்தால்) அப்பொழுதே சென்று துன்பத்தை நீக்குவது சிறந்த நட்பாகும்.*

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2008
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 12**

## பேச்சுப் போட்டி – மத்திய பிரிவு (பிறந்த திகதி: 01.07.1998 – 30.06.2000)

## தமிழில் பேசுவோம்

நாம் தமிழர். தமிழ் நமது தாய் மொழி. தமிழ் இனம் நமது இனம். தமிழகமும் தமிழ் ஈழமும் நமது தாயகங்கள். அந்தத் தாயகங்களிலே பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வருபவர்கள் தமிழர்கள்.

தமிழ் மொழி மிகவும் இனிமையானது. தமிழ்ப் பண்பாடு மிகவும் சிறந்தது. தமிழர்களின் நாகரிகம் மிகவும் உயர்ந்தது.

அண்மைக்காலத்தில் பல இலட்சம் தமிழ் மக்கள் தாயகங்களை விட்டுப் பல்வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தார்கள். சிலர் பொருள் தேடிப் புறப்பட்டார்கள். சிலர் வசதியான வாழ்வை நாடிப் போனார்கள். மற்றும் பலர் போர்ச்சூழலில் இருந்து தப்பித் தம் உயிர்காக்கப் புலம்பெயர்ந்தார்கள்.

எந்த நோக்கத்திலே இடம்பெயர்ந்தாலும், எண்பதுக்கு மேற்பட்ட நாடுகளிலே இன்று தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள்.

அவர்கள் வாழ்கின்ற நாடுகளிலே வழங்குகின்ற மொழிகள் வேறுபட்டவை. ஆனாலும், தமிழர்கள் தாய்மொழியான தமிழை மறவாது தமது தனித்துவத்தைப் பேண வேண்டும். அது தமது கடமை என்று உணர வேண்டும். உலகெங்கும் சிதறிக்கிடக்கும் தமிழ் இனத்தை ஒருங்கிணைப்பது தமிழ் மொழி. அந்த மொழியை மறந்துவிட்டால் நமது அடையாளத்தை இழந்து விடுவோம். அடையாளம் இல்லையென்றால் இனமே இல்லாமல் போய்விடும். நாளைய நமது தலைமுறையினருக்குத் தாய்மொழியின் அவசியத்தை உணர்த்த வேண்டும். தமிழ்ப் பண்பாட்டின் அருமையை எடுத்துரைக்க வேண்டும். நமது தனித்துவத்தைப் பேணவேண்டும் என்பதை வலியுறுத்த வெண்டும்.

வீடுகளில் தமிழ் மொழியிலே பேச வேண்டும். தமிழ் மக்கள் கூடுகின்ற இடங்களில் எல்லாம் தமிழ் மொழியில் உரையாட வேண்டும். தமிழரும் தமிழரும் பேசும்போது அந்நிய மொழியைத் தவிர்க்கவேண்டும்.

அதே வேளை வாழ்கின்ற நாட்டிலே நாம் மதிப்புடன் வாழவேண்டும். ஏனைய இனத்தவர்களுடன் இசைந்து போகவேண்டும். நமது மொழியை, நமது கலையை, நமது பண்பாட்டை, நமது நாகரிகத்தை மற்றவரும் போற்றும் வண்ணம் நமது நடத்தை அமைய வேண்டும்.

நாமாக இருப்பதும், மற்றவரை மதிப்பதும் அவுஸ்திரேலியாவைப் போன்றதொரு பல்லினக் கலாசார நாட்டிலே கடினமான விடயங்களல்ல. மிகவும் சாதாரணமானவைதான். இலகுவாகச் சாதிக்கக் கூடியவைதான். சாதிப்போம். நன்றி.

வணக்கம்.

**பேச்சுப்போட்டி – மேற்பிரிவு (பிறந்த திகதி: 01.07.1995 – 30.06.1998)**

# தாய்மொழியைக் காப்போம்

தமிழ்மொழி நமது தாய்மொழி. பல்வேறு சிறப்புக்களைக்கொண்ட பண்பட்ட மொழி

கட்டுக்கோப்பான இலக்கணப் புலமை, கணக்கில்லாத இலக்கியச் செழுமை, தோன்றிய காலம் தெரியாத பழமை, பல்லாயிரம் ஆண்டுகளாக மாறாத இளமை, அறிவியல் வளர்ச்சியோடு ஈடுகொடுக்கும் புதுமை இவ்வாறு பல்வேறு சிறப்புக்களைக்கொண்டது தமிழ் மொழி. அந்தத் தமிழ்மொழி நமது சொந்தத் தாய்மொழி என்பதிலே நாம் மிகவும் பெருமைப்படலாம்.

அமிழ்தினும் இனியது தமிழ்மொழி என்று பலமொழிகளைப் பயின்ற அறிஞர்கள் பாராட்டுகின்றார்கள். யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம் என்றார் மகாகவி பாரதியார். கணனித் தொடர்புகளுக்கும் மிகவும் இசைவான, இலகுவான மொழியும் தமிழே என்று இன்றைய அறிஞர்கள் இயம்புகின்றார்கள்.

இன்றைக்கு எங்கெங்கு மனிதர்கள் வாழ்கின்றார்களோ அங்கங்கெல்லாம் தமிழர்களும் வாழ்கின்றார்கள் என்றுகூடச் சொல்லலாம். அந்த அளவிற்கு ஒன்பது கோடித் தமிழ் மக்கள் உலகெங்கும் பரந்து எண்பதுக்கும் மேற்பட்ட நாடுகளிலே வாழ்கின்றார்கள்.

தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் தாம் வாழுகின்ற இடங்களிலெல்லாம் தமிழ்மொழியை வளர்த்தார்கள். பண்பாட்டைப் பேணினார்கள். இனப்பற்றை இழக்காமல் வாழ்ந்தார்கள். ஆனால் நாளாக நாளாக எல்லாமே நலிவடைந்து போகின்றன. அந்நிய நாடுகளில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு தமிழ் மொழியின் பயன்பாடு குறைந்துவிட்டது. அதனால் தாய்மொழி ஆர்வமும் குறைந்துவிட்டது.

புலம்பெயர்ந்த நாடுகளிலே தமிழராய்ப்பிறந்து தமிழராய் வளர்ந்து தமிழராய் வாழ்ந்து வருபவர்கள் சிலர். தமிழராய்ப் பிறந்து தமிழராய் வளர்ந்து, தமிழ் மொழியைத் துறந்து, தாம் தமிழர் என்பதையும் மறந்து வாழ்ந்து வருபவர்கள் பலர்.
தமிழராய்ப் பிறந்த தங்கள் குழந்தைகளை தாய்மொழியைப் புரியாதவர்களாக, தங்கள் இனத்தை அறியாதவர்களாக, தமிழ்ப் பண்பாடுகள் தெரியாதவர்களாக வளர்த்துவருபவர்களோ இன்னும் பலர். அதனால் எதிர்காலத்தில் அந்த நாடுகளில் எல்லாம் நமது மொழியும், நமது இனமும் மறைந்துவிடக்கூடிய நிலைமை இருக்கிறது. நினைத்துப் பார்க்கும் போது நெஞ்சம் கனக்கிறது.

நமது தாயகத்திலே முன்னாளில் அந்நியரின் ஆக்கிரமிப்பால் தமிழ்மொழி சிதைந்தது. பின்னாளில். ஆட்சியாளரின் புறக்கணிப்பால் தமிழ் மொழியின் பயன்பாடு குறைந்தது இந்நாளில். புலம்பெயர்ந்த தமிழர்களின் இனப்பற்றும், மொழிப்பற்றும் குறைகின்ற காரணத்தால் மொழி மறைந்து போகின்றது. இந்த நிலை நீடிக்கக்கூடாது. இனத்தால் தமிழர்களாகிய நமது எதிர்காலச் சந்ததி மொழியால் அனாதைகளாகக் கூடாது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்கின்ற உயரிய பண்பை உலகிற்குச் சொல்லிக்கொடுத்த நமது உன்னத மொழியை நாமே மறத்தல் கூடாது.

தமிழராய்ப் பிறந்து, தமிழராய் வளர்ந்து தமிழராய் வாழுகின்றது இன்றைய பரம்பரை. நாளைய பரம்பரையும் தமிழராய்ப் பிறக்கவேண்டும், தமிழராய் வளரவேண்டும், தமிழராய் வாழ வேண்டும் என்று நாம் நினைக்க வேண்டும். அதற்கு வழி சமைக்கவேண்டும்.

வீடுகள் தோறும் தேன் மொழி பேசுவோம் - கூடி
விளையாடுவோம் தமிழ் இசை பாடுவோம்
ஆடுவோம் நண்பர்கள் கூடுவோம் தமிழர்கள்
அனைவரும் தமிழினில் உரையாடுவோம்.

வாழ்க தமிழ் வணக்கம்.

## பேச்சுப்போட்டி – அதிமேற்பிரிவு (பிறந்த திகதி: 01.07.1990 – 30.06.1995)

# யாவரையும் மதிப்போம் நாமாக இருப்போம்

நாம் தமிழர். எமது தாய்மொழி தமிழ். தமிழ் மொழியானது உலகிலுள்ள உயர்ந்த மொழிகளிலே ஒன்று. தமிழகமும், தமிழ் ஈழமும் தமிழரின் பாரம்பரியத் தாயகங்கள். ஆயினும் ஒன்பது கோடித் தமிழ் மக்கள் இன்றைக்கு உலகெங்கும் பரந்து எண்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் வாழ்கின்றார்கள். உலகின் மூலை முடுக்குக்களிலெல்லாம் தமிழன் தன் காலைப் பதித்திருக்கிறான். காலைப் பதித்த இடமெல்லாம் வாழத்தலைப்பட்டுவிட்டான்.

தமது தாயகங்களில் இருந்து, குறிப்பாகத் தமிழ் ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் அனைத்துலக நாடுகள் பலவற்றில் அந்தந்த நாடுகளின் பிரசைகளக வாழ்கின்றார்கள். நிரந்தர வாசிகளாக வாழ்கின்றார்கள். அகதிகளாக வாழ்கின்றார்கள். அவர்களெல்லாம் தாயகங்களோடு இணைந்தவர்களாகவும், தாயக நினைவுகளைச் சுமந்தவர்களாகவும், தாய்மொழிப்பற்று மிகுந்தவர்களாகவும் அந்தந்த நாடுகளில் தம் வாழ்வினைத் தொடர்ந்துகொண்டு இருக்கின்றார்கள்.

வாழுகின்ற நாடுகளில் வழங்குகின்ற மொழிகளிலே படிக்கவும், எழுதவும், பேசவும் வேண்டியது அவர்களுக்கு அவசியமாகிவிட்டது. அத்தகைய தமிழ்மக்கள் கணிசமான தொகையினராய் வாழ்ந்துவருகின்ற ஒரு நாடாக அவுஸ்திரேலியாவும் திகழ்கின்றது. இங்கே ஆங்கிலத்திலே கல்வி பெறவேண்டிய அவசியம் நமக்கு இருக்கிறது. வேறு மொழிகளையும் கற்கவேண்டிய நிலைமை நமக்கு ஏற்படுகின்றது. வேற்று இனத்தவர்களோடு பழகவேண்டிய தேவை இருக்கின்றது. இந்தப் பல்லினக் கலாசார நாட்டிலே எல்லா இனத்தவர்களையும், எல்லா மதத்தவர்களையும் ஏற்று மதித்து நடக்கவேண்டிய கடமை நமக்கு எழுகின்றது. ஆனால் இது நமக்குப் புதியதல்ல. மாற்றாரையும் மதிக்கவேண்டும் என்பது பண்டைக் காலம்முதல் நமது பண்பாட்டிலே கலந்தது அல்லவா? நமது வாழ்வியலோடு இணைந்தது அல்லவா?

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆக்கப்பட்ட சங்கத்தமிழ் இலக்கியங்களிலே ஒன்றான புறநானூற்றிலே, இடம்பெறுகின்ற ஒரு பாடலில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று சொல்லப்படுகின்றது. கணியன் பூங்குன்றனார் என்ற புலவர் இயற்றிய அந்தப் பாடலின் இந்த வரி கூறுவதென்ன? எல்லா ஊர்களும் நமது ஊர்களே. எல்லா மக்களும் நமது உறவினர்களே என்றல்லவா சொல்கிறது? எல்லோருமே நம்மவர்கள் என்று எண்ணிக் கொண்டால் எல்லோரிடமும் நமக்கு அன்பு உண்டாகும். மாற்றார் என்று யாரும் இல்லையென்றால் மற்றவர்களிடமும் நமக்கு மதிப்பு உண்டாகும்.

"அன்பின் வழியது உயிர்நிலை" என்கிறார் திருவள்ளுவர். மற்றவர்களிடமும் அன்பு செலுத்தவேண்டும், மற்றவர்களையும் மதித்து நடக்க வேண்டும் என்று எத்தனையோ குறள்களில் அவர் இடித்து உரைத்துள்ளார். இவை மட்டுமன்றி, எண்ணிக்கையின்றிக் குவிந்து கிடக்கின்ற எத்தனையோ தமிழ் இலக்கியங்கள் யாவரையும் மதிக்கவேண்டும் என்பதை நமக்கு எடுத்து உரைக்கின்றன. எனவே, மற்றவரையும் மதிக்க வேண்டும், மற்றவரிடமும் அன்பு செலுத்த வேண்டும் என்பதையெல்லாம் பண்டைக் காலத்திலிருந்தே தமது பண்பாடாகக் கொண்டவர்கள் தமிழர்கள்.

அதேவேளை வளம்மிக்க தமிழ் மொழியையும், வரலாற்றுப் பெருமை மிக்க வாழ்வியல் நெறியையும் கொண்டுள்ள நாம் நமது தனித்தன்மைகளைப் பேணவேண்டியது அவசியமாகும். மொழி இல்லை யென்றால் இனமில்லை, இனத்திற்கு அடையாளம் இல்லை. எனவே நமது மொழியை நாம் காக்க வேண்டும். மொழியைக் காக்க வேண்டும் என்றால் முதலில் அதனைக் கற்க வேண்டும். நம்மவரோடு நமது மொழியிலே பேசவேண்டும். நம் வீட்டுமொழி தமிழே என்று ஆகவேண்டும். நமது பண்பாடுகளைப் பேணவேண்டும். அவற்றை எதிர்காலச் சந்ததியினருக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்கள் அவற்றை அடுத்தடுத்த தலைமுறையினருக்கும் எடுத்துச் செல்ல வேண்டும். அப்படியானால்தான் தமிழ் மொழி வளரும். நமது இனம் வாழும். நமது பண்பாடுகள் நிலைக்கும். எனவே நாமாக இருக்க உறுதிகொள்வோம். யாவரையும் மதிக்கப் பழகிக்கொள்வோம்.

வணக்கம்.

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2008
# அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
# Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 13**

## போட்டிகள் பற்றிய உங்கள் கருத்து

அன்புடையீர்!
போட்டி பற்றிய உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகின்றோம். உங்களது கருத்துக்களும் அபிப்பிராயங்களும் எதிர்காலத்தில் எமது போட்டிகளை மேலும் சிறப்பாக நடாத்த உதவும் என்பதை அறியத்தருகின்றோம். உங்கள் கருத்துக்களை நேரடியாகத் தரவிரும்பின் உங்கள் பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றைத் தரவும். நாங்கள் உங்களுடன் தொடர்பு கொள்வோம். நன்றி.

கீழேயுள்ள விடயங்களுக்குச் சரியென நீங்கள் எண்ணும் இலக்கத்தைத் தெரிக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) போட்டி பற்றி வழங்கப்பட்ட விளக்கம் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 2) போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்ட விதம்: | 1 | 2 | 3 | 4 | 5 |
| 3) போட்டிகளை மதிப்பிடும் விதம் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 4) போட்டிக்கு வழங்கப்பட்ட கவிதை, பேச்சு | 1 | 2 | 3 | 4 | 5 |
| 5) பொதுவாக போட்டியாளர்களின் தரம் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6) போட்டியில் பெற்றோரின் ஒத்துழைப்பு | 1 | 2 | 3 | 4 | 5 |
| 7) இப்போட்டியால் மாணவர்களடையும் பயன் | 1 | 2 | 3 | 4 | 5 |
| 8) இப்போட்டிகளில் மீண்டும் பங்குபற்றவுள்ள விரும்பம் | 1 | 2 | 3 | 4 | 5 |

குறிப்பு: 1 – மிகக்குறைவு, 2 - குறைவு, 3 - மத்திமம், 4 - நன்று, 5 - மிகநன்று.

9) போட்டியில் காணப்பட்ட குறைகள் அல்லது முன்னேறக்கூடிய விடயங்கள்:
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................

10) நீங்கள் போட்டி பற்றி வேறு ஏதாவது கூறவிரும்புகிறீர்களா? ..............................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................

பெயர்: ........................................

தொலைபேசி: ............................... திகதி:..........................

(குறிப்பு: போட்டி முடிந்தபின் இந்தப் படிவத்தை நிரப்பி போட்டி நடத்துனரிடம் கொடுக்கவும் அல்லது எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.)

தொடர்புகளுக்கு: PO Box 4040 Homebush NSW 2140. Tel: 02-8824 3051 or 0419 255 625.
E-mail asogt.tc@gmail.com Web: www.kalappai.org

## தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2008
## அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
### Tamil Competition - Australian Society of Graduate Tamils

**இணைப்பு: 14**

## Details for competition prizes – Tamil competitions 2008

**A) Gold medal** - தங்கப்பதக்கம் **( 10)** - Aus $300.00 per medal
1st prize winner in national competitions level
**B) Memorial Trophy / Winner's trophy ( 10 )**- Aus $160.00 per trophy & First 3 prizes
1st prize winner in any competitions at state level.
**C) First 3 prizes (23 competitions)** - Aus. $60.00 per competition
Prizes for first 3 winners of any competitions
**D) Special Prizes (prizes for 5 winners)** - Aus. $50.00
A group of winners who are selected after first 3 prizes
**E) Special Prizes (prizes for 10 winners)** - Aus. $100.00
A group of winners who are selected after first 3 prizes
**F) Donations for certificates and other donations:** Your nominated amount

We honour all our donors by special mention on the prize giving ceremony souvenir.

---

## Details of your donation:

Name: ……………………………………………………….

Address: ………………………………………………………

Phone: ………………………..(H) …………………….(O) …………………….(Mobile)

Email: ……………………………………………….

Category (one of the above):…………………………………………………

Preferred name for the Prize: ……………………………………………………………

……………………………………………………………………………………………..

Amount: ………………………………………………

Payment method: Cheque / Money order / cash

You may draw or cheque in favour of `Tamil competitions' and post it to our official address: P. O. Box 4040, Homebush, NSW 2140.

----------------------------------------　　　　----------------------------------------
Sponsor's signature　　　　Date